1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது

Tele { grams: "CATHOLIC PRESS JAFFNA
phone: No. 100.

# சத்தியவேத பாதுகாவலன்

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

79-ம் புத்தகம் யாழ்ப்பாணம் 1954-ம் ஆண்டு பங்குனி மாதம் 18-ந் திகதி வியாழக்கிழமை — பிரதிசதம் 10 11-ம் இலக்கம்

## சுதேச வர்த்தமானம்

### காலநிலை

சென்றவெள்ளிக்கிழமை இவ்விடம் எதிர்பாராதவிதமாக நல்லமழை பெய்தது. அதனால் வெப்பம் ஓரளவில சாந்தியாயிற்று. இன்னும் அதிகமான மழைக்கோலம் காணப்படுகின்றது. இந்தமழையால் தற்போது பூக்கத் தொடங்கியிருக்கும் மா, முருங்கை முதலியவற்றிற்குப் பெரும் கெடுதியாகும். சிலவிடங்களிலே வெங்காயப்பயிருக்கும், அறுவடையாகும் நெற்பயிருக்கும் நஷ்டம் ஏற்பட்டுள்ளது. புகையிலைத் தோட்டக்காரர இந்தமழையினால தங்கள்புகையிலைப் பயிர் சேதமடையலாமென அஞ்சுகின்றனர். காய்ந்துபோய்க்கிடந்த புற்றரைகளுக்கு இந்தமழை நன்மைசெய்திருக்கிறது. அதனால் ஆடுமாடுகளுக்கு நன்மைஏற்பட்டிருக்கிறது.

### ஸ்ரீமதி விஜயலட்சுமி பண்டிட்

ஐக்கியநாடுகளின் பொதுச்சபைத் தலைவியும், இந்தியபிரதமர் பண்டித ஜவஹர்லால் நேருஅவர்களின் சகோதரியுமான ஸ்ரீமதி விஜயலட்சுமி பண்டிட்அவர்கள் சென்றசெவ்வாய்க்கிழமை தமது இருபுதல்விகளுடன் இந்தியன் எயர்லைன் விமானமொன்றில் இரத்மலானை விமானநிலையம் வந்திறங்கியபோது, பிரதமரும், மற்றும் பிரபலஸ்தருமாக ஐயாயிரம்மக்கள் அவளை வரவேற்றுநின்றார்கள். அவர் கொழும்பையும், பிறவிடங்களையும் தரிசித்து, ஆங்காங்கு வரவேற்புகள் பெற்றுக் கொண்டு, 21-ந் திகதியாகிய வருகிற ஞாயிற்றுக்கிழமைகாலை விமானமூலம் யாழ்ப்பாணம் வந்துசேர்ந்து காங்கேசன்துறைவிருந்தினர் விடுதியிலே சேர் கந்தையா வைத்தியநாதன் தம்பதிகளின் விருந்தினராயிருப்பார். அன்று சாயந்தரம் யாழ்ப்பாணநகரமண்டபத்திலே அவருக்கு ஓர்வரவேற்பு அளிக்கப்படும். பின்னர் நகரமண்டபத்திலே அவருக்கு ஓர்விருந்துஉபசாரணை நடத்தப்படும். மறுநாள் 22-ந் திகதி காலை அவர்விமானத்திலே இந்தியாவுக்குப் பயணமாவர்.

### செனற்சபை உபசாரப்பத்திரம்

எலிசபெத் மகாராணியார் இலங்கைக்கு விஜயஞ்செய்யும்போது, செனற்சபை அவருக்கு ஓர்நவீன உபசாரப்பத்திரம்ஒன்று படித்து அளிக்கவிருக்கின்றது. இந்தப்பத்திரம் ஓலையில்எழுதப்பட்டு, கருங்காலி அடித்தளமுடையதும், ஒருஅடி உயரமுள்ளதுமான ஒருசங்கினுள் அடைத்து வைக்கப்பட்டிருக்கும். இந்தச்சங்கு கண்டியர்களின் புராதனசித்திரக்கலையைத் தழுவியமுறையிலே தங்கத்தாலும், வெள்ளியாலும் அலங்கரிக்கப்படவிருக்கிறது.

### வெங்காயக் கூடைகள்

நெடுந்தீவு, அரசினர்மத்திய கலாசாலையிலே வெங்காயக்கூடைகள் செய்யும்கைத்தொழில நல்லபயன் அளித்துவருவதாகவும, அதனால் மாணவர்களுக்கு மாதம் ஆயிரம்ரூபாவுக்குமேல் வருமானம கிடைப்பதாகவும தெரியவருகிறது.

### முதற்பிரதமரின் உருவச்சிலை

இலங்கையின் முதலாவது பிரதமராக விளங்கியிருந்து காலஞ்சென்ற திரு. டி. எஸ். சேனநாயகஅவர்களின் வெண்கல உருவச்சிலைஒன்று மின்னேரிச்சந்தியிலே நிறுவப்படவிருக்கிறது. அனுராசபுரத்திலே சென்றவெள்ளிக்கிழமை நடைபெற்ற ஓர் பகிரங்கக்கூட்டத்திலே இவ்வாறு தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. இந்தஉருவச்சிலை நிதிக்கென்று அங்கு குடியேறியவர்கள் ஒவ்வொருவரிடமும் ஒவ்வோர்புசல்நெல் அறவிடப்படும். இவ்விதம் ஓர்காலபோகத்தில்சேகரிக்கப்படும்நெல இந்த நிதிக்குப்போதியதாகும். திரு. டி. எஸ். சேனநாயகஅவர்கள் ஓர்குதிரையில் அமர்ந்தபாவனையாகவே இந்தஉருவச்சிலை அமைக்கப்படும. ஏனெனில், மின்னேரிக்குளத்தை அதன்புராதன நிலைக்குக் கொண்டுவருமவேலை தொடக்கப்படுமுன் பாழாய்க்கிடந்த அணைக்கட்டை முதலடையாளங் கண்டு பிடித்தபோது அடர்ந்த காட்டினூடாக அவர் ஓர்குதிரையிலேயே சென்றார்.

### அமெரிக்க மிதக்கும்மாளிகை

மிதக்கும்மாளிகையென்று வர்ணிக்கப்படுவதான "இன்டிபென்டென்ஸ்" எனும் அமெரிக்க உல்லாசப்பிரயாணக் கப்பல் சென்ற 5-ந் திகதியன்று கொழும்புத்துறைமுகம்வந்து சேரலாயிற்று. இதிலே பிரயாணஞ்செய்யும் உல்லாசப்பிரயாணிகளில் ஒவ்வொருவருக்கும் நாள்ஒன்றுக்கு ஏற்படுஞ் செலவு 1,035 ரூபாவாகும். விசேஷப்பட்டசெலவு இதில் சேரமாட்டாது. உலகத்தைச்சுற்றி இதுநடத்தும் 65 நாள் பிரயாணத்திலும் ஒவ்வொருவருக்கும் ஏற்படும் பிரயாணச் செலவு 14,000 டலர். இரண்டு படுக்கைச் சூட்ஒன்றுக்கு 29,000 டலர். இதில் கொண்டுபோகப்படும் ஒவ்வோர் நாய்க்கும் பிரயாணச்செலவு 50 டலர். இதிலே 5,000 மைல் தூரத்துக்குப் பேசக்கூடிய றேடியோ-தெலிபோன் ஒன்றும், நீர்தற்குளங்கள் இரண்டும், கீழ்நாடுகளிலேயேஇல்லாத பந்தைய விளையாட்டு மைதானமும், மற்றும்பல வசதிகளும் உள்ளன. இந்தக்கப்பல் அமெரிக்கரின் இன்றைய வாழ்க்கையைப் பிரதிபலிப்பதாகும். 29,500 தொன் நிறைகொண்டதும், ஒன்பது தட்டுள்ளதுமான இந்தக்கப்பலில் மகா செல்வவந்தரான 450 அமெரிக்கர் பிரயாணஞ்செய்கின்றார்கள்.

### பதினைந்தாம் ஆண்டு விழா

தமது மகுடதாரண பதினைந்தாம ஆண்டு நிறைவுவிழாவைச் சென்ற வெள்ளிக்கிழமை கொண்டாடிய 12-ம் பத்திநாதபாப்பரசர் அன்றுதினம் கருதினல்மார் திருச்சங்கத்தைசசேர்ந்த சகலகருதினல்மாரின் பேராலும் தமக்குவணக்கத்தையும், நல்வாழ்த்துகளையும் தெரிவிக்கும செய்திஒன்றைக் கொண்டுவந்த தமதுகருதினல்மாரின் தூதுக்கோஷ்டிஒன்றை வரவேற்றார். வத்திக்கான் மாளிகையிலுள்ள சிஸ்ரைன்சிற்றாலயத்தில் அன்றுநிகழ்ந்த தேவதோத்திரபூசைக்குப் பாப்பரசர் சமுகமளிக்க இயலாதவரானார். இவ்வாறு தந்திச்சமாச்சாரம் அன்று தினம் கிடைக்கலாயிற்று.

### தினமும் ஆயிரம்ரூபா நஷ்டம்

றெயின்வண்டிகளிலே டிக்கெற்றின்றிப் பிரயாணஞ்செய்கிறவர்களால் அரசாங்கத்துக்குத் தினமும் ஆயிரம்ரூபாவுக்குமேல் வருமானநஷ்டம ஏற்பட்டுவருவதாய்க் கண்டறியப்பட்டிருக்கிறது. இம்மாதம் றெயில்வேஅதிகாரிகள்செய்த பரிசோதனையிலிருந்து இது வெளியாயிற்று. இம்மாதத்திலே மூன்றுநாள் றெயில்வேப் பாதுகாப்புப் படையினர் நடத்திய விசேஷபரிசோதனைகளின்போது 103 பேர் டிக்கெற்றின்றிப் பிரயாணஞ்செய்யக் கண்டு பிடிக்கப்பட்டார்கள். இவர்களிடமிருந்து மேலதிகசலாராகவும், அபராதமாகவும் 405ரூபா அறவிடப்பட்டது.

### கற்கண்டும் சீனியும்

இலங்கையிலே சீனிவிற்பனவால் அரசாங்கத்துக்கு வருடந்தோறும் கிடைக்கும்ஆதாயம் 9 கோடியே 50 லட்சம் ரூபாவாகும். ஆனால், கடந்த நான்குமாதங்களிலும்மாத்திரம் இந்த ஆதாயத்தில் 15 லட்சம்ரூபா குறைந்திருக்கிறது. இதற்குக்காரணம் சீனிக்குப்பதில் கற்கண்டுச்சீனி அதிகமாக விலைப்படுவதேயாகும். இதுவரை வியாபாரிகளே கற்கண்டு இறக்குமதிசெய்து வந்தார்கள். தனக்குஏற்படும் நஷ்டத்தையிட்டுத் தற்போது அரசாங்கம் அவர்கள் கற்கண்டு இறக்குமதிசெய்வதைத் தடைசெய்திருக்கிறது. இனிமேல் அரசாங்கஉணவுப்பகுதியே கற்கண்டு இறக்குமதிசெய்யும். சீனிஇறக்குமதிசெய்ய அனுமதிக்கப்படாத வியாபாரிகள் அதற்குப்பதிலாகப் பெருந்தொகையான கற்கண்டு இறக்குமதிசெய்து வந்தார்கள். சென்றசில வாரங்களில்மட்டும் பதினாயிரம்அந்தர் கற்கண்டு இறக்குமதிசெய்யப்படலாயிற்று. தாங்கள் இறக்குமதிசெய்த கற்கண்டை வியாபாரிகள் அரைத்துச் சீனியாக்கி அரசாங்கம் விற்றுவரும் சீனியுடன் போட்டியிட்டுவருகிறார்கள். கற்கண்டை அரைத்துத் தயாரிக்கப்படும்சீனி அதிகம்மதுரமாக இருப்பதாலே இதற்குநல்லமானம் பிறந்திருக்கிறது.

### மகாராணியாரும் கார்களும்

அடுத்தமாதம் அரசதரிசகர்கள் இங்கு விஜயஞ்செய்யும்போது, அவர்களின்பாவனைக்கென்று புதியகார்களை வாங்குவதில்லையென்று அரசாங்கம் தீர்மானித்திருக்கிறது. கொழும்பிலுள்ள மோட்டர்கார் கம்பெனிகள் அவர்களின்பாவனைக்கென்று ஒருதொகையான கார்களைக் கொடுத்துதவ உடன்பட்டிருக்கின்றன.

### தவறணைகளும் குத்தகைகாரரும்

இலங்கையர்அல்லாத எவருக்கும் இலங்கையிலே கள், சாராயக் குத்தகை லைசென்ஸ்கள் இனிமேல் கொடுப்பதில்லையென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. அதன்படி தற்போதுள்ள குத்தகைகாரர்களில் நூற்றுக்கு 75 விகிதமானோர் தங்கள்லைசென்ஸ்களை இழக்கவேண்டிவரும். தவறணைக் குத்தகைகாரர்களில் பெரும்பாலானோர் மலையாளிகளே. அரசாங்கத்துக்குப் பெருந்தொகையான வருமானத்தைக்கொடுக்கும் தவறணைகளை இலங்கையரே நடத்தவேண்டும்என்பது அரசாங்கத்தின்கருத்தாகும்.

### மகாராணியாரின் விஜயம்

அடுத்தசித்திரைமாதம் 10-ந் திகதியன்று இலங்கைக்குத் தாமவிஜயஞ் செய்வதையிட்டு இலங்கை மக்கள் விசேஷஉடைகளுக்கென அவசியமின்றிப் பணத்தை விரையஞ்செய்வதை எலிசபேத் மகாராணியார் விரும்பவில்லை; அதற்குப்பதில் உள்நாட்டு வழமைகள் அனுசரிக்கப்படவேண்டுமென அவர் விரும்புகின்றார். இவ்வாறு உள்நாட்டுமந்திரி காரியாலயம் சென்ற சனிக்கிழமை அதிகாரபூர்வமான ஓர்அறிக்கை வெளியிட்டிருக்கின்றது. தாம்விஜயஞ்செய்யும் நாடுகளைச்சேர்ந்தமக்கள் தமக்காகப் புதிய உடைகள்தைத்து விசேஷசெலவுகள் செய்யப்படாதென்பதே மகாராணியாரின் உத்தேசமென்றும் இந்தஅறிக்கையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது.

### மாலைதீவில் சுல்தான்ஆட்சி

மாலைதீவுகள் 800 ஆண்டுகளுக்குமேல் சுல்தான்அரசர்களால் ஆட்சிசெய்யப்பட்டு வந்தன. ஆனால், 1953-ம் ஆண்டு இந்தத்தீவுகள் குடியரசாகப் பிரகடனஞ்செய்யப்பட்டன. ஆயின் கடந்த ஒருவருடகாலத்திலும் சுல்தான்ஆட்சியைத் திரும்பவும்அங்கு ஏற்படுத்துவதற்குப் பெரும் ஆதரவு கிடைத்துவந்து, சுல்தான்ஆட்சியையே நிறுவுவதென மாலைதீவுஅரசாங்கம் சென்றமாசிமாதம் 22-ந் திகதியன்று தீர்மானித்துவிட்டது. அதனால் புதிய சுல்தானாக அல்அமீர் முகம்மதுபரீதடிடி தெரிவுசெய்யப்பெற்று இப்போது சிம்மாசனத்தில் ஏற்றப்பட்டிருக்கின்றார். நாட்டிலே குடியரசுஆட்சி தரித்திரநிலையை உண்டுபண்ணியதே அதன்நீக்கத்துக்குக் காரணமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிஸ்றர் பாஸ்கலீனுவின் ஒப்பற்றபணி

ஜேர்மனிதேசத்தவரான சிஸ்றர் பாஸ்கலீனு உலகில் மிகப்பெருமையுள்ள ஓர்பிரத்தியேக பணிசெய்து வருகின்றார். அவரே பன்னிரண்டாம் பத்திநாத பாப்பரசரின் வீட்டுப் பணிவிடைக்காரியாவர்.

பாப்பரசர்மாளிகையிலுள்ள பணியாளர்களைப் பாஸ்கலீனு கன்னியாஸ்திரியே மேற்பார்வையிடுகிறார். இதிலும்பார்க்க அதிகம்காத்திரமானவேலை இவருக்கு உண்டு. அதாவது, நாற்பது கோடிமக்களின் ஞானவழிகாட்டியாய் விளங்கும் பாப்பரசரின் தேகசுகத்தையும், அத்துடன்சம்பந்தப்பட்ட பிறகருமங்களையும கவனித்துவருவதேயாகும்.

பவேரியநாட்டிலே ஓர் குக்கிராமமாகிய எபேர்ஸ்பாக்என்பதே சிஸ்றர் பாஸ்கலீனுவின் சொந்தஊர். அங்கு அவர்பெயர் பிறேுலின் லெய்னேட். உலகில்இவர் உயர்வடையத் தகமை உள்ளவரென்று அப்போது பலரும் எண்ணினார்கள். ஆயினும்இவர் வத்திக்கானமாளிகையில பொறுப்புள்ள பணியாற்றுவாரென்று அப்போது அவர்கள் அற்பமேனும கருதினார்களில்லை.

இற்றைக்குஏறக்குறைய முப்பத்தைந்து வருடங்களுக்குமுன் சிஸ்றர் பாஸ்கலீனு பாப்பரசருக்கு ஊழியம் புரியச்சென்றார். யூஜினியோ பச்செல்லிஆண்டவர் பவேரியநாட்டுக்கு அப்பொஸ்தலிக்கஸ்தானீகராக நியமனம் பெற்று அங்குசென்றபொழுது அவருக்குப் பணிவிடைகாரர் தேவைப்பட்டனர். கார்ச்சாரதியாகவும், பல வேலைகளுக்கும் முட்டாளாகவும் மரியோ ஸ்தோப்பா அமர்த்தப்பட்டார். ஆனால், வீட்டுக்கருமங்களையும், சமையலையும் கவனிப்பதற்கு ஒருவர்தேவையாயிருந்தது.

சுவிற்சர்லாந்துதேச மடம்ஒன்றிற்கு அதிமேற்றிராணியார் பச்செல்லிஆண்டவர் ஓய்விலே முன்னர் சென்றிருந்தார். அம்மடத்தில் பொதுஉக்கிராணதனதிகாரியாகக் கடமையாற்றிவந்த கன்னியாஸ்திரியின் ஞாபகம் இப்பொழுது அவருக்குவந்தது. அக்கன்னியாஸ்திரி அந்தமடத்து அலுவல்களைச் சட்டவட்டமாகச் செய்துவந்ததை அவர்கவனித்திருந்தார். அந்தக் கன்னியாஸ்திரியான சிஸ்றர்பாஸ்கலீனு தனதுகடமையைப் பவேரியாவிலுள்ள பாப்பரசர்ஸ்தானீகரின் காரியாலயத்திற்பார்க்க அழைக்கப்பட்டார்.

யூஜினியோ பச்செல்லி ஆண்டவர் வேறுவேறு பதவிகளினிமித்தம் இடம்மாறிச் சென்றபோதெல்லாம சிஸ்றரும ஆங்காங்குசென்று, இறுதியாக அவர் சம்பேதுருவானவரின் சிம்மாசனமேறவே, சிஸ்றர்பாஸ்கலீனுவும் அங்குசென்றார்

பாப்பரசரைப் பராமரிப்பது சிஸ்றர் பாஸ்கலீனுவின சுபாவமாகிவிட்டது. அங்கே அவரைக் காணபவரோ, கண்டு கதைப்பவரோ இல்லை. அவரதுகண்காணிப்பிலே பாப்பரசரின் மாளிகையலுவல்கள் முறைபிறழாது, குறையொன்றுமில்லாது நடந்துவருகின்றன. அவ்விடத்தின் கிரமமான அமைப்பிற்குச் சிஸ்றர்பாஸ்கலீனு இன்றியமையாதவராகிவிட்டார்.

பாப்பரசர் காலை 6 மணிக்குத் துயிலொழிந்து எழுந்திருக்கும்போது சிஸ்றருடைய நாளாந்தகடமைகளும் தொடங்கும். தமதுஅறையைவிட்டு அவர்வெளிகொள்ளும்வரை அவரைக் காத்துநின்று சந்திக்க, 'பரிசுத்த பிதாவுக்கு இன்றுஏதேனும் விசேஷ அலுவல் உண்டோ?'' வென்று சிஸ்றர் வினவுவார். ''அப்படியானவிசேஷம் ஒன்றுமில்லை'' என்றுதான் எப்பொழுதும் மறுமொழிகிடைக்கும்.

இவ்வாறு சிஸ்றர்பாஸ்கலீனு கேட்பதற்குக் காரணமுண்டு. ஏனெனில், பாப்பரசர்போல் தருமம்வழங்குவது சிஸ்றர்தான். அவருக்குவரும் கடிதங்களுக்குப் பதிலஎழுதுவதும், உதவி கேட்டுவரும் விண்ணப்பங்களை ஆராய்ந்து தகுதிகண்டு தருமப்பணம் விநியோகிப்பதும் சிஸ்றர்தான். அங்கு வந்துகுவியும் வேண்டுகோள்கடிதங்களிலே தகுதியானவற்றைத் தெரிந்து கொள்ளும் சாதுரியமும், வன்மையும் சிஸ்றருக்கு இயற்கையாக உண்டென்பார்சிலர்.

இதுதவிர, புத்திபோதாவுகேட்டும், பேட்டிவிரும்பியும்,பணத்துடன்சாராத பிறவேண்டுகோள்கள்செய்தும் கடிதங்கள் வருவதுண்டு. இவைகளுக்குத் தனது ஓய்வுநேரத்திலே பாபபரசர் போல் சிஸ்றர்பாஸ்கலீனு பதிலளிக்கிறார்.

பாப்பரசரதுஅங்கிகளைக் கண்காணிப்பதும் இந்தக்கன்னியாஸ்திரியின் உத்தியோகமே. இது இலகுவானஓர் காரியமல்ல. உதாரணமாக, பாப்பரசர் ஓர்நீண்ட வெள்ளை அங்கி தரித்துக் கொள்வார். நாள்தோறும் அநேகருக்குப் பேட்டிஅளிப்பதால் அவரது அங்கியின் கைஓரம் அசுத்தமாகும். தக்கவேளைகளிலே சிஸ்றர்பாஸ்கலீனு புதிய கைவிளிம்புகளுடன் வந்து, பிறர் காணுவண்ணம முந்தியவைகளைமாற்றிப் புதியவைகளை அணிந்துவிடுவார்.

பேட்டிகள்முடிந்ததும் சிஸ்றர்பாஸ்கலீனு பஞ்சும், கிருமிநாசினிமருந்தும் கொண்டுவருவார். சனங்கள்எல்லோரும் பாப்பரசரின் மோதிரத்தை முத்திசெய்கிறபடியால் கிருமிகளைத்தடுக்க

எம். ஜேயம்

அதைத் துப்பரவாக்கவேண்டியது அவசியமாகின்றது. பாப்பரசரின் உணவு காரியங்களையும் சிஸ்றர்கவனிக்கிறார். காப்பியும், விஸ்கோத்தும் அவருடைய காலைஆகாரமாகும். கொஞ்சம்முட்டை சாப்பிடும்படி சிஸ்றர் அவரைத்தூண்டுவார். ஆனால், பாப்பரசர் அற்பமாகத் தானும முட்டைபாவிக்கமாட்டார்.

பாப்பரசர் தனிமையாகவே மத்தியானப்போசனஞ்செய்வார். அதில சூப்பும், ஒருதீனும், பழமும், அல்பான் முந்திரிகை இரசமும் அடங்கும். இராப்போசனத்தைச் சிஸ்றர்தானே ஒழுங்குபடுத்தக் கூடியவராகின்றார். பாப்பரசர் சாப்பாட்டுநேரத்தைக் கிரமமாக வைத்துக்கொள்ள வேண்டுமென்று விரும்புகிறசிஸ்றர் அவருக்கு அதை நினைவூட்ட அஞ்சுவதில்லை. அப்படிச் செய்வது சிலவேளைகளில் அவருடைய வேலையைக் குழப்பும், அல்லது சந்திக்க வந்தவரைத் திருப்பும். கடைசியாகப் பாப்பரசர் தமதுஅன்றாடம்வேலையை நிறுத்தச்செய்வதும் சிஸ்றரின் வேலையாகத்தானிருக்கும்.

இரவிலே சம்பேதுருவானவர் மகாலய சதுக்கத்திற்குப் போகிறவர்கள் வத்திக்கான்மாளிகையின் மேல்மாடியிலே ஓர்அறையின்வெளிச்சம் எரிவதை யன்னல்வழியாகக் காணலாம் அது நடுநிசிஒருமணிக்கும்எரியும். அது பாப்பரசரின் காரியாலயம். அவர் அடுத்தநாட்காலை 6மணிக்குத் துயிலொழிந்து எழுந்திருக்க வேண்டியபடியால் அடிக்கடி சிஸ்றர்பாஸ்கலீனு அவ்விடஞ்சென்று ''பரிசுத்தபிதாவே, இப்பொழுது மணிஒன்றாகிறது'' என்பார். ''நல்லது'' என்றுவிட்டு, செய்யும்வேலைகளை அப்படியே விட்டுவிட்டுப் பாப்பரசரும் சயனஅறைக்குச் செல்வார். அதன்மேல் சிஸ்றர் பாஸ்கலீனுவும் இளைப்பாறச் செல்லமுடியும்.

பாப்பரசரின்மாளிகைப் பராமரிப்புக்காரருக்கு ஓரேவீட்டுஅலுவல் மாத்திரமல்ல. சிலவேளைகளில் பாப்பரசரின் வைத்தியரைச்சந்தித்து அவருடைய தேகநிலையை அறிவிக்கச்செல்லுவார் வத்திக்கானையும், இத்தாலியையும் பற்றிப் பத்திரிகைகளுக்கு அநாமதேயராய் இடையிடையே சிஸ்றர்பாஸ்கலீனு விமரிசனங்கள் எழுதுவதுமுண்டு. அவைகள் கத்தோலிக்கபத்திரிகைகளில் இடம்பெறும்.

பாப்பரசரின் மாளிகைக்கருமங்களைக் கவனிப்பவர் அதிகவிளம்பரம் அடைவதில்லை. ஏனெனில், உலகப்பிரசித்திபெறவேண்டுமென்று அவருக்கு நோக்கமில்லை. சிஸ்றர் பாஸ்கலீனு பாப்பரசருக்கும், திருச்சபைக்கும் தொண்டுபுரிவதையே தமதுஇலட்சியமாகக் கொண்டிருக்கிறார். இவர் திருச்சிலுவைச்சபை அல்லது மென்சிங்கென என அறியப்படும் கன்னியாஸ்திரிமார்சபையைச் சேர்ந்தவர். அவர்கள் உலகின்பலபாகங்களிலும், இந்தியா, இலங்கையிலும் பலவிததொண்டுகள் புரிந்துவருகிறார்கள். யாழ்ப்பாணத்திலும், ஊர்காவற்றுறையிலும் அரசினர் வைத்தியசாலைகளிலே நோயாளரைப் பராமரித்துவருகிறார்கள். கொழும்புத்துறையிலும் வயோதிகர்சாலையொன்றை நடாத்துகிறார்கள். அவர்களுடன்சேர்ந்து தொண்டுபுரிவது ஓர் பெரும் பாக்கியமேயன்றோ.

# தேம்பாவணியும் செபமாலையும்

## களிகூர்ந்தகாரணிக்கம்

### 4-ம் காரணிக்கம் — 1-ம் பிரியதத்தம்

### 31. கற்பனைக்கமைதல்

மூவரசர் குகையைவந் தடைந்து தேவபாலகனை வணங்கித் திரும்பிய செய்தி காட்டுத்தீபோல் நாட்டில் எங்கும்பரவியது. மக்கள் குகையினிடத்தே திருஅவதாரஞ் செய்திருக்கும் திவ்விய குழந்தையைக் காணத் திரள்திரளாக வருவாராயினர். அதனால்,

''கொடியொக்க மல(ர்)உயர்த்தோன்
குழவியெடுத்(து)
அரும்புகழ்செய் குழுவிற்(கு) அஞ்சி''

பூக்கள்மலர (மலர்ஒக்க) பூங்கொடியை உயரத்தாங்கிய சூசைமாதவன், குகையை நாடிவந்து அருமையான துதிகளைஞ் சொல்லுகின்ற சனக்கூட்டத்திற்கு அஞ்சித் தேவபாலகனை எடுத்துக்கொண்டு (குழவியெடுத்து)

''மிடியொக்க எளிமையுற வெயிலார்ந்த
கதிர்கரக்கும் விகத்தன்போல''

சூரியன் (விகத்தன்) ஒளிநிறைந்த கிரணங்களோடு (வெயிலார்ந்த கதிர்) கடலில் ஒளித்திருப்பதுபோல, தரித்திரமும், தாழ்ச்சியும் ஒன்றுபட்டிருக்க (மிடியொக்க எளிமையுற)

''கடலொக்கப் பெத்திலேயேம் கடிநகருள்
சிறுவீட்டில் கரந்துபுக்கார்''

கடலைப்போல விளங்கும் காவலைக் கொண்ட பெத்தலேகம்நகரில் சிறிய தோர்வீட்டில் ஒளித்திருக்க (கரந்து) தேவதாயுடன் சென்றடைகின்றார்.

சிறியகுடிசையிலே திருக்குடும்பம் அமைதியாக வாழ்ந்துவருகிறது. தேவபாலன்பிறந்த நாற்பதாம்நாளும் வந்தடைகிறது. யூதசாதியாரின் முறைப்படி சுத்திகரச்சடங்கும், காணிக்கைச் சடங்கும் நிறைவேற்றவேண்டி யிருந்தது. அதனால்அவர்கள் எருசலேம் தேவாலயத்திற்குப் போகவேண்டியிருந்தது.

''மோயீசனுடைய நியாயப்பிரமாணத்தின்படி அவளுடைய சுத்திகரநாட்கள் நிறைவேறினபோது, அவரை ஜெருசலேமுக்குக் கொண்டுபோனார்கள். ஏனெனில், தாயின்கருப்பையைத் திறந்துபிறக்கும் ஆணெல்லாம் (தலைப்பேறுண குமாரன்)ஆண்டவருக்கு அபிஷேகமாக்கப் பட்டதென்று கர்த்தருடைய நியாயப்பிரமாணத்திலே எழுதியிருக்கிறபடி, அவரைக் கர்த்தர் சமுகத்தில் ஒப்புக்கொடுக்கவும், ஒரு சோடு காட்டுப்புறாக்களையாவது, இரண்டு மாடப்புறாக் குஞ்சுகளையாவது பலியாகச் செலுத்தவேண்டுமென்று, கர்த்தருடைய பிரமாணத்தில் எழுதியிருக்கிறபடி செய்யவும் அவரை ஜெருசலேமுக்குக் கொண்டுபோக வேண்டியதா யிருந்தது.'' —(லூக். II. 22-24.)

யூதசாதியாரின் இச்சட்டத்திற்குத் தேவபாலகன் உட்பட்டவர் அல்லர். ஏனெனில், சட்டத்தை அளித்தவர் அவரே. எவ்வாறெனில்,

''நிறைநீத்(து) எகித்தார் பகைமுற்றி
நெடுநாள் சிறைசெய்(து) யூதர்கள்தம்
மிறைநீத்(து) உயர்ந்த குலமெல்லாம்
விடைந்தார் என்ன விடைத்(து)இறை
யோன்''

முன்னொருகாலத்தில் எகிப்துநாட்டார் நீதிமுறையைக் கைவிட்டு (நிறைநீத்து) பெரும்பகைகொண்டு குற்றமில்லாமல் (மிறைநீத்து) திருவருள்சிறந்த (உயர்ந்த) யூதகுலத்தாரை யெல்லாம் நெடுநாளாக அடிமைப்படுத்தி வைத்திருந்தார்கள். அங்ஙனம் பகைத்து வருத்தினரென் றறிந்து (விடைத்தார் என்ன) கடவுள் எகிப்துநாட்டாரைப் பகைத்து வருத்தி (விடைத்து)

''குறைநீத்(து) எல்லாத் தலைமகரைக்
குலைய ஒன்னார் தான்கொன்று
சிறைநீத்(து) இயூதர் அமு(து)ஒழுகும்
திருநா(டு) அமைத்தி அருள்செய்தான்''

அவர்களுடைய தலைச்சன்பிள்ளைகளையெல்லாம் ஒன்றும்குறைபாமல்

பண்டிதர் C. செல்வரத்தினம்

(குறைநீத்து) அப்பகைவர் நடுநடுங்க (ஒன்னார் குலைய) ஓர் இராத்திரியிலே கொன்று தன்அடியாராகிய யூதரை அடிமைத்தனத்தினின்றும் நீக்கி(சிறைநீத்து) தேனும்பாலும்ஒடுகின்ற (அமுதொழுகும்) செல்வநாடான கானானதேசத்தையும் அவர்களுக்குக் கொடுத்து (அமைத்தி) இரட்சித்தார்.

அங்ஙனமாக, யூதர்களின் அடிமைத்தனத்தைநீக்கி அவர்களுக்குச் செய்தருளியகருணையை அவர்கள்என்றும் மறவாமலிருக்கும்படி ஆண்டவர் செய்தருள விரும்பினர். அந்நன்றியை யூதசாதியார் என்றென்றும் போற்றி நடத்தற்கு உதவியாகத் ''தலைச்சன் பிள்ளையைக் காணிக்கைவைக்கவேண்டும்'' என்ற கட்டளையைக் கொடுத்திருந்தார்.

எனினும், சூசையப்பரும், தேவதாயாரும் இக்கட்டளையை அனுசரிக்க வேண்டியவர்கள் அல்லர். ஆயினும் அவர்கள் சாமானிய மக்களைப் போலவே இக்கட்டளையை அனுசரிக்க விரும்பினார்கள். திவ்விய யேசுவின் விருப்பத்தை அவர்கள் நன்குதெரிந்திருந்தார்கள். 'தேவதிருச்சுதனர் தாழ்ச்சியை எத்துணைவிருப்பமாக நேசிப்பவர்' என்பதை நன்குஅறிந்திருந்தார்கள். ''நம்மைப்போல வாழ்ந்து நன்மாதிரிகைகாட்டவே அவர் இப்பூவுலகில் எழுந்தருளி வந்தார்'' என்ற பேருண்மையை நன்கு உணர்ந்து கொண்டார்கள். அதனால் அவர்கள் இருவரும்,

''அன்னாள் சிறையைத் தீர்த்தபிரான்
அவர்க்(கு) ஏவினபாலால் எவர்க்கும்
இன்னாள் சிறைதீர் தனிமகனை
இவரும் நேர்தற்(கு) ஏகலுற்றார்.''

யூதரது சிறையை மீட்டிரட்சித்த தேவனதுகட்டளைப்படி, எல்லோருடையவும் பாவச்சிறையைத் தீர்த்து இரட்சிக்கப்பிறந்த ஏகதிருக்குமாரனைப் பிதாவாகிய சருவேசுரனுக்குக் காணிக்கையாகக்கொடுக்க எருசலேம் பட்டணத்திலுள்ள தேவாலயத்திற்குப் போகத் தொடங்கினார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வத்திக்கானின் வெள்ளிவிழா

வத்திக்கான் இராச்சியத்தை சுவமாக நிறுவியதும், திருச்சபைக்கும், இத்தாலிய அரசாங்கத்துக்குமிடையே இராசீய உறவை ஏற்படுத்தியதுமான லத்தறன் உடன்படிக்கை நிறைவேறிய 25-ம் ஆண்டு நிறைவு விழா சென்ற மாசி 11-ந் திகதியன்று இத்தாலி முழுவதிலும், வத்திக்கான் இராச்சியத்திலும் தேவதோத்திர பூசைகளோடும், தேவதோத்திர கீதங்களோடும் சிறப்பாகக் கொண்டாடப்படலாயிற்று. பாப்பரசரது சுகவீனங்காரணமாக விழாவின் குதூகலம் குறைந்தபோதிலும் வத்திக்கான் முழுவதும் பாப்பரசின் கொடிகளால் அலங்கரிக்கப்பட்டு, காரியாலயங்கள் மூடப்பட்டு, அங்குவாழும் ஆயிரவருகளும் அன்றுதினம் ஓர் விடுமுறை நாளாய் இருந்தது. இத்தாலிய அரசாங்கஅதிகாரிகள் ரோமை நகரிலுள்ள பல்வேறுகோவில்களிலும் திவ்வியபூசைகண்டார்கள். ரோமைநகரிலே பாப்பரசரின் பரிவாரத்தைச்சேர்ந்த கருதினல்மாரும், அதிகாரிகளான குருசிரேஷ்டர்களும், இத்தாலியசெனற்சபை, சனப்பிரதிநிதிகள்சபைத் தலைவர்களும், மற்றும் இத்தாலிய பாராளுமன்ற அங்கத்தவர்களும், அந்நகரிலுள்ள ஸ்தானிகர்கள், இராசீயப்பிரதிநிதிகளும் ஓர்விசேஷ ஆராதனைக்கென்று ரோமைநகரசபையின் விசேஷ ஆலயஞ் சென்றார்கள். இத்தாலியஜனதிபதிக்கும், அத்தேசமக்களுக்கும பரிசுத்தபாப்பரசர் ஓர் சோபனசெய்தியும், தமது ஆசீர்வாதமும அனுப்பிவைத்தார்.

### கண்ணீர் சிந்திய
## கன்னித்தாய்

சென்றவருடம் ஆவணிமாதத்திலே நான்கு தினங்களாகக் "கண்ணீர்சிந்திய கன்னித்தாயா"ரின் ஞாபகத்தைச் சதா நிலைநாட்டுமாறு பசிலிக்கா எனும் ஓர்மகாலயத்தைக் கட்டியெழுப்பப் பணம் உபகரிக்குமாறு சிசிலிதீவைச்சேர்ந்த சிறக்கூஸ் நகர் அதிமேற்றிராணியாரான பறன்சினி ஆண்டவர் மனுப்பண்ணியிருக்கின்றார். அது கட்டியெழுப்பப்படும் இடத்தையும், அதன் மாதிரியையும் பற்றி ஆலோசிக்குமாறு கம்மிற்றி ஒன்று ஆக்கப்பட்டிருக்கிறது. இந்தப் புதுமையுள்ள சுரூபம் ஆயிரக்கணக்கான யாத்திரிகர்களை நாடோறும் ஈர்ந்தவண்ணமிருக்கின்றது. அதன் மூலம் அநேக அற்புத ஆரோக்கியங்கள் கிடைப்பதாகப் பாராட்டப்படுகிறது. மரிய அத்தனுசியோ எனும் கலியாணமான ஒருபெண் அசையவோ, பேசவோ, பார்க்கவோ முடியாத நிலைமையில் இருந்தாள். கண்ணீர்சிந்திய மாதாவின் அருளாலேதான் அற்புதமாகக் குணமடைந்தால் தனது கலியாணமோதிரத்தைக் காணிக்கையாகக் கொடுப்பதென்றும், அங்ஙனம் குணமடைவதும் 15 தினங்களுள் நடந்தேறவேண்டுமென்றும் அவள் ஓர்நாள் அபிநயமூலம் தன்கணவனுக்குத் தெரிவித்தாள். இதுநிகழ்ந்து பதினன்காம்நாள் அவளின் கலியாண மோதிரம் அவளுடைய நடுவிரலில் இருப்பதைக் கணவன் கண்டான். "உனது மூன்றாவதுவிரல் அத்தனை அதிகம் பருமனாயிருக்கும்போது, எவ்வாறுமோதிரத்தை அதில போட்டாய்?" என்று அவளைக் கேட்டான். அப்போது அவள் மிகுந்த பிரமிப்புடன் கையைக் கவனித்தாள். ஒருவிரலிலிருந்து மறுவிரலுக்கு அது எப்படிப் போயிற்றென்பது அவளுக்கே புரியவில்லை. மறுநாள் கணவன் உணவுதயாரித்துக்கொண்டிருக்கும்போது, தனது தோள்களின்மேல கைஒன்று வைக்கப்பட்டதைஉணர்ந்துதிரும்பிப் பார்த்தவிடத்து, தன்மனைவி குணமடைந்தவளாய்த் தனக்குப்பின்னல் நிற்கக்கண்டான்.

## செபமாலைப் பாஷை

கோறிய பாஷையையோ அன்றேல் சீனபாஷையையோ பேசஅறியாத நான்குஇந்திய குருமார் கோறியாவிலே கத்தோலிக்கரான சீனர்களுக்கும், யுத்தகைதிகளான கோறியர்களுக்கும் விசாரணைக்குருமாராய்க் கடமைபார்த்தபோது தங்கள்செபமாலைகளைக் காண்பித்து அவர்களுக்குத்தங்களை அறிமுகப்படுத்திக் கொண்டார்கள். "எனதுசெபமாலையைக் கையிற்பிடித்துக்கொண்டு சீனர்களை அடைத்துவைத்திருந்த கூடாரங்களுக்குவெளியே நான் உலாவிச்சென்றேன்; உடனே தானே கத்தோலிக்கரான சீனர்கள் வெளிகொண்டுவந்து தங்கள்சொந்தச் செபமாலைகளை எனக்குக்காட்டி, 'சென்பியூ' அதாவது 'ஞானத்தந்தையே' என்றுசொல்லி எனக்கு வாழ்த்துகள்கூறினார்கள்" எனப் பாப்பாய் அதிமேற்றிராசன விக்கார்ஜெனறலான மிகவண. யோசெவ் லொபோசுவாமியார் அறிவிக்கிறார்.

## சவேரியாரின் திரைப்படம்

அமெரிக்காவிலே பெயர்பெற்ற திரைப்பட உற்பத்திநகரமாகிய ஹொலிவூட்டிலே அர்ச். பிரான்சீஸ்சவேரியாரின திரைப்படம்ஒன்று தயாரிக்கப்பட்டுவருகிறது. "கீழ்த்திசையில் நெருப்பு" என்று நாமஞ்சூட்டப்பட்டுள்ள இப்புதியபடத்திலே, "கோ வாதிஸ்," "பாத்திமாமாதா" எனும்படங்களில் நடித்தவர்கள்பலர் நடிக்கின்றார்கள். இதிலே நடிப்பதற்குத் தெரிந்துகொள்ளப்பெற்ற முக்கியநடிகர்கள் அனைவரும் கத்தோலிக்கரே. இதிலே கிறீஸ்துவவாழ்க்கையின் தூய்மை சிறப்பாக எடுத்துக்காட்டப்படவிருக்கிறது.

## செய்தியை அறிவித்தகுற்றம்

பரிசுத்தபிதா நோய்வாய்ப்பட்டு வருந்துகிறாரென்ற செய்தியைப் பிரசங்கபீடத்திலநின்று அறிவித்ததற்காக இரும்புத்திரைநாடுகளிலுள்ள குருமார் அபராதம்விதிக்கப்பட்டும், சிறையிற்தானும் வைக்கப்பட்டுமிருக்கின்றார்கள். போலாந்து, ஹங்கேரி, செக்கோசிலவாகிய நாடுகளிலே தங்கள்குருமாருக்கு மேற்றிராணிமார் அனுப்பிய கடிதங்களெல்லாம்கடுமையாகப் பரிசோதனைசெய்யப் படலாயின. பரிசுத்தபிதாவின் சுகத்தாழ்வுபற்றியசெய்தி குருமார் வசம்போய்ச்சேராது தடுத்துவிடுவதே அதன்நோக்கமாகும். பாப்பரசரின் சுகசேமமானது "தொழிலாளர் வகுப்புகளின் கருமசம்பந்தமானதல்ல" என்று மேற்றிராணிமார் எச்சரிக்கப்பட்டிருக்கிறார்கள். தமது சுயகிராமத்திலே சிறைவைக்கப்பட்டிருக்கும் கருதினல் ஸ்ரிபினக்ஆண்டவர் பரிசுத்தபிதாவுக்கு ஓர் அனுதாபசெய்தி அனுப்பமுயன்றபோது யூகோசிலேவிய அதிகாரிகள் அதை அனுப்பிவைக்க மறுத்துவிட்டார்கள்.

# பாத்திமாநாயகியின் நீலப்படை

அமெரிக்க ஐக்கியதேச நியூஜேர்ஸியைச்சேர்ந்த பிளெய்ன பீல்ட் எனுமிடத்திலே அடியிடப்பெற்ற "பாத்திமாநாயகியின் நீலப்படையானது உண்மையான உலகசமாதானம் உண்டாவதற்கேற்ற ஓர்சாதனம்" என்று கருதினல் ஈயூஜினி திசரான் ஆண்டவர் பாராட்டிக்கூறியிருக்கின்றார். நீலப்படையாகிய இந்தஞானப்படை தற்போது 28 தேசங்களிலே 40 லட்சம்பேருக்கு மேற்பட்ட அங்கத்தவர்களைக் கொண்டிருக்கின்றது. "இன்று ஒவ்வொருவருமே சமாதானத்தை ஆசிக்கின்றார்கள்; ஆனால், உண்மையான சமாதானம்என்பது தேவபக்தியில்லாதவர்களின் மனந்திரும்புதலையே முந்தக் குறிப்பதாகின்றது; இதற்குமுன் நம்மை நாமே புனிதப்படுத்திக்கொள்வது அவசியமாகும்; நீலப்படையிற் சேர்ந்து தங்களைத் தேவசேவைக்கு ஒப்புக்கொடுத்த ஆண்களும்பெண்களும் தத்தம் சொந்த வாழ்க்கையைத் திருச்சபையின் நோக்கத்துக்கிணங்க ஒழுங்குபடுத்தி அந்நோக்கத்தை நிறைவேற்ற உழைத்து வருகின்றனர் என்றும் அவர்கூறலாயினர்.

## ரோமைத் திருயாத்திரை

இவ்வாண்டு புரட்டாசிமாதம் 8-ந்திகதிமுதல் 12-ந்திகதிவரையில் ரோமைநகரிலே நிகழவிருக்கும் சர்வதேசமாதாசபைகளின் மகாநாட்டில் கலந்துகொள்ளுமாறு இந்தியாவிலுள்ள தேவமாதாசபைகளின் தேசீய நிர்வாகசபை அங்கு ஓர்திருயாத்திரையை ஒழுங்குபடுத்துகின்றது. இதிற்சேரும யாத்திரிகர்கள் புரட்டாசிமாதம் 5-ந்திகதி பம்பாயிலிருந்து ஆகாயவிமானத்தில்புறப்பட்டு மறுநாள் ரோமாபுரிபோய்ச் சேர்வார்கள். மகாநாட்டுக்குமுன்னும் அதுமுடிந்த பின்னும் ரோமை நகரிலும், அதன்சுற்றாடலிலுமுள்ள பல விடங்களையும் சுற்றிப்பார்ப்பார்கள். பின்னர் அம்மாதம் 15-ந் திகதி அங்கிருந்தும்புறப்பட்டு ஜெனேவா, நீஸ், மார்சேல்ஸ், மதிரித், லூர்து, பரீஸ், லண்டன், பிறசெல்ஸ், பிராங்போட், மிலான், புளோறென்ஸ் முதலாம்இடங்களையும் பார்த்துத் திரும்புவார்கள். இந்தயாத்திரை ஒருமாதம்வரையிலே நீடித்திருக்கும். ஒவ்வொருவருக்கும் ஏற்படும் யாத்திரைச்செலவு 3,800 ரூபாவாகும்.

# இருநூருவது மேற்றிராணியார்

சமீபத்திலே ஓர்மேற்றிராணியாராக நியமனஞ்செய்யப்பெற்ற மகாவண. யோசெவ் அன்னைபிறிங்சுவாமியார் அபிஷேகஞ்செய்யப் படும்போது அமெரிக்கஐக்கியதேச மேற்றிராணிமார், அதிமேற்றிராணிமாரின்தொகை அதன் சரித்திரத்திலேயே முதன்முறையாக இருநூறாகும். இத்தாலியும், வேதகலாபனையற்ற சாதாரண காலத்தில் சீனவுமே அதிகங்கூடிய மேற்றிராணிமார், அதிமேற்றிராணிமாரைக் கொண்டிருக்கின்றன. புதிய மேற்றிராணியார்உட்பட அமெரிக்க ஐக்கியதேசத்திலே தற்போது 4 கருதினல் அதிமேற்றிராணிமாரும், 31 அதிமேற்றிராணிமாரும், 165 மேற்றிராணிமாரும், முடிகவித்த ஓர்மடாதிபரும் இருக்கின்றார்கள். இவர்களைத்தவிர அமெரிக்கமேற்றிராணிமார், அதிமேற்றிராணிமாராய் 25பேர் வெளிநாடுகளில் தொண்டாற்றிவருகின்றார்கள்.

## பேர்னதேத்தின் திரு உடல்

லூர்துதிருப்பதியிலே தேவதாயாரின்காட்சிபெற்ற அர்ச். பேர்னதேத்அம்மாளின் திருச்சரீரம் நெவேர்ஸ்நகரிலே பிறர்சிநேகசபைக் கன்னியாஸ்திரிமாரின் மடத்துச்சிற்றாலயத்தில் இருந்துவருகிறது. இந்தச்சிறிய இடையப் பெண்பிள்ளைக்குத் தேவகன்னித்தாயார் காட்சிகள் அருளிய நூறாம்ஆண்டு நிறைவுவிழா வருகிற 1958-ம்ஆண்டு வருகின்றது. அப்போது அவள் திருமேனியை லூர்துபதிக்கு எடுத்துச்சென்று அவ்வருடமுழுவதும் அதனைத் திருக்கெபிக்குச் சமீபமாக வைப்பதற்கான திட்டங்களைப் பிரான்சிய அதிமேற்றிராணிமாரும், மேற்றிராணிமாரும் செய்துவருவதாக அறிவிக்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பங்குனிமாதம்

போதுக்கருத்து :— பரிசுத்த பாப்பரசரின் பொதுக்கருத்துகளுக்கும், விசேஷகருத்துகளுக்குமாக வேண்டிக்கொள்வது.

மிஷன்கருத்து :— வேதபோதக சகோதரரின் சபைகளுக்காக மன்றாடிக்கொள்வது.

### ஓயாது செபியுங்கள்!

புன் முறுவலும் செபமாகும்,<br>
நல் வார்த்தையும் செபமாகும்,<br>
அன்பும் செபமாகும்,<br>
பலியும் செபமாகும்;<br>
துயரமும் செபமாகும்,<br>
செபமாலையும் செபமாமே.

சத்தியவேத
**பாதுகாவலன்**
1954-ம் ஆண்டு
பங்குனி மாதம் 18-ந் திகதி

## திவ்விய யேசுவுக்காக

திவ்வியயேசுவுக்காகப் பணியாற்றுவதே தேவகைத்தாதையான அர்ச். சூசையப்பரின் விசேஷசலாக்கியமும், பாக்கியமுமாய் இருந்தது. அஃதாவது, ஓர் நாள் தோளிற்சுமந்த பாரச்சிலுவை ஒன்றின் கீழ் நொறுங்கி நசுங்குண்ணவிருந்த இளந்திருஅவயவங்கள் தைரியங்கொண்டுவளர அமுதூட்டி வளர்க்கும் — அரிமத்தியா ஊரவரும், ஐஸ்வரியவானுமான மற்றோர் சூசையப்பர் தூயவெள்ளைப் பரிவட்டத்தினுல் சுற்றி, நவமான திருக்கல்லறையில் அடக்கஞ்செய்யவிருந்த நரதேவனின் திருமேனிக்கு ஆடைகள் தரிக்கும் — வானவர்கள் போற்றிவணங்கும் தேவகுமாரன் வானவீட்டைத் துறந்து இப்பூவுலகில் மனுமகனுய் அவதரித்தபோது அவர்வாழ்வதற்கென்று ஓர் இல்லத்தைத் தேடிக்கொடுக்கும் — சலாக்கியமும், பாக்கியமும் பெற்றவர் அர்ச். சூசையப்பரே. அதனுல், அவரை நிதமும்கண்டுபாவித்துத்திவ்விய யேசுவுக்காகப்பணி— அதாவது தொண்டாற்றுவதும், உயிர் வாழ்வதும், அவர் ஸ்தாபித்தருளிய சத்தியதிருமறையில சகலரும்வந்துசேரும்படியாக இரந்து மன்றாடுவதும், அவருடையவரப்பிரசாதத்தைக்கொண்டு அவர் வாசஞ்செய்யத்தகும் இல்லமாக நமது இருதயங்களை ஆக்குவதும் நமக்குரிய சலாக்கியமும், பெரும்பாக்கியமுமாகும். அன்றாடன்று வேலைமுடிந்த பிறகு தேவபாலகனைத் தமதுமார்போடு அணைத்துக்கொண்டு அவர்முன்பாகச் செபஞ்செய்து — அவரைப் போஷிப்பதற்காக அவர்முன்பாகக் கஷ்டப்பட்டு வேலைசெய்து — அவருக்காகவே தமது வாழ்க்கையை அர்ப்பணஞ்செய்து, அவரது மிருதுவானகரத்தைத் தமதுகரத்தால்பிடித்துத் தச்சுத்தொழிலை அவர் பயின்றுகொள்ளச்செய்து — அல்லும்பகலும் பரலோகத்திற்போன்று தேவசந்நிதானத்திலே சீவிக்கும் சலாக்கியமும், பாக்கியமும் பெற்றிருந்தார் அர்ச். சூசையப்பர். நாமும்அவரைப்போல இன்று தேவபாலகனைத் திவ்வியநற்கருணை மூலம் நம்முடைய இதயங்களிலே எழுந்தருளச்செய்து, அவரை நமது மார்போடு அணைத்துக்கொண்டு அவர்முன்பாகச் செபஞ்செய்யலாம். "நான் பசியாயிருந்தேன், எனக்குப் போசனங் கொடுத்தீர்கள் .... என்னுடைய மிகவும்சிறிய சகோதரர்களாகிய இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் செய்தபோதெல்லாம் எனக்கே அதைச்செய்தீர்கள்" எனும் சுவிசேஷவாக்கை நினைவுகூர்ந்து அர்ச். சூசையப்பரைப் போல் அவரைப்போஷிப்பதற்காய் அவர்முன்பாக கஷ்டப்பட்டு வேலைசெய்யலாம். நாமும் செபத்தாலும், தபத்தாலும், சுத்தகருத்தோடு நமதுகிரியைகளைச் செய்வதாலும் அவருக்காக நம்முடையவாழ்க்கையை அர்ப்பணஞ்செய்யலாம். அர்ச். சூசையப்பரைப் போல அல்லும்பகலும் நாமுமே தேவ சந்நிதானத்தில் சீவிக்கலாம். புண்ணியபாதையில் — சிலுவையின்பாதையில் தேவசித்தத்துக்குப்பணிந்து நாமும் நடந்து செல்லலாம். அர்ச். சூசையப்பரின் திருச்சுரூபத்தையோ அன்றேல்படத்தையோ பொதுவாகநாம் நோக்கும்போதெல்லாம் அவர் குழந்தையேசுவைத் தமதுகரங்களில் ஏந்தியபாவனையாகவே காட்சியளிக்கின்றார். அவருடைய உலகவாழ்க்கையானது யேசுவுடன் அதிகமாக ஈடுபட்டிருந்ததையே இது நமக்குப் புலப்படுத்துகின்றது. இன்னும்அவர் தமதுகரம்ஒன்றிலே ஓர்லீலிப்பூங்கொம்பையும், மறுகரத்திலே குழந்தை யேசுவையும் வைத்திருக்கக்காண்கிறோம். இந்தப்பூங்கொம்பு அவருடைய தூய்மையை எடுத்துக்காட்டுகின்றது. இதிலிருந்து திவ்வியயேசுவுக்காக நாமும் வாழவேண்டுமானுல் அர்ச். சூசையப்பரைப் போலத் தூய்மையானவாழ்க்கை நடத்தவேண்டுமென்பதை நாம் மனதிற் கொள்ளவேண்டும். ஈற்றில் திவ்வியயேசுவுக்காகவும், அவருடைய திருத்தாயாருக்காகவும் உலகில்சீவித்திருந்து, சகலசீவராசிகளுக்கும் எசமானும், நமது திவ்வியஇரட்சா பெருமானுமாகிய அவரினதும், ஆதாமுடைய மக்களின் நம்பிக்கையும், மதுரமுமான கன்னிமரியம்மாளினதும் திருச்சமுகத்திலே—அவர்களின் திருக்கரங்களிலே பாக்கியமாக மரிக்கும் மகாபாக்கியமான வரத்தைப் பெற்றுக்கொண்ட அர்ச். சூசையப்பரை — அன்பான நன்மரணதாதாவை என்றென்றும் நாமும் பக்திசெய்து அவரிடம் நல்மரணவரத்தை இரந்து பெற்றுக்கொள்வோமாக!

## கண்ணீர் சிந்திய கன்னித் தாய்

மகாவந். றேச் ஆண்டவர் எழுதுகின்றார்

மத்தியதரைக் கடலிலுள்ள பற்பல தீவுகளில் மிகப்பெரியதும், அதிகம்பிரசித்திபெற்றதும் சிசிலிதீவாகும். இது ஏறக்குறையப் பதினுயிரம்சதுரமைல் விஸ்தீரணமுடையது. இதன் சனத்தொகை பத்துலட்சம். 10,865 அடி உயரமான எற்னுஎனும் பேர்பெற்ற எரிமலை இங்குதான்உள்ளது. இன்னமும் இது குமுறிக்கொண்டுதான் இருக்கிறது. இதிலுள்ள விந்தையிலும்விந்தை என்னவென்றால், இதன் அடிவாரத்தில் பயங்கரமான அக்கினிசுவாலை; ஆனால், அதைச்சுற்றிலும் சதாஉறைபனி மூடியிருக்கிறது. தைமாதம் 13-ந்திகதி காலை 10 மணிக்கு நேப்பிள்ஸ்நகரிலிருந்து புறப்பட்டுச் சிசிலிதீவின் பிரதான துறைமுகப்பட்டணமாகிய மெசினாநகரில் மாலை 7 மணிக்கு வந்துசேர்ந்தோம்.

மறுநாள் சிசிலிதீவின் பிரதானபட்டணங்களாகிய மெசினா, பலர்மோ, காத்தானியா, அச்சீரியாலே முதலாம் நகர்களைப் பார்த்தோம். அச்சீரியாலே நகர் மெசினாவிலிருந்து சுமார் 15மைல் தூரத்திலுள்ளது. இங்குள்ள ஏழைகளின் சிறியகன்னியாஸ்திரிமார் மடத்திலே தைமாதம் 15-ந் திகதி திவ்வியபூசை நிறைவேற்றினோம். சிசிலிதீவுக்கு நாம்வந்த முக்கியநோக்கம், சிறக்கூஸ் நகரிலே கண்ணீர்சிந்திய கன்னித்தாயின் புதுமையுள்ள சுரூபத்தைப் பார்க்க வேண்டும்என்பதே.

தைமாதம் 16-ந்திகதி சனிக்கிழமை நமக்கு ஓர்பாக்கியமானநாள். அன்று காலை இந்நகரிலுள்ள சந்தலூசியாஅம்மாள் ஆலயக்கோவிலில் திவ்வியபூசை நிறைவேற்றிவிட்டு, 9 மணிவரையில் கண்ணீர்சிந்திய கன்னித்தாயின் புதுமையுள்ளசுரூபத்தைக் கண்குளிரக் காணும் பாக்கியத்தைப் பெற்றோம். இப்புதுமைநடந்தது சென்ற 1953-ம் ஆண்டு ஆவணிமாதம் 29-ந் திகதி காலை 8-30 மணிக்கு. ஆஞ்சலோ யனுசோ என்பவனின்மனைவி அந்தோனி ஜியுஸ்தோஅம்மாள். வயது இருபது. பேறுகாலசமயத்தில் சொல்லொணுஉபாதை அனுபவித்தாள். இவளின் கலியாண தினமன்று இவளுடைய தமையனின் மனைவியான கிறேசியாஅம்மாள் இவளுக்கு மரியாயின் மாசற்றஇருதயம் சித்திரிக்கப்பட்ட சுரூபம் ஒன்று கொடுத்திருந்தாள். இந்தச் சுரூபம் அவள்படுக்கைக்குமேல இருந்தது. இவளுக்கோ வலி தாங்கமுடியவில்லை. இசிவுஎடுத்தது. கண்மங்கியது. அப்போது இருதயமாதாவைப் பார்த்து வேண்டிக்கொண்டாள்.

மயக்கம்நீங்கியது, கண்பார்வை ஒளிபெற்றது. ஏறெடுத்துச் சுரூபத்தைப் பார்த்தாள். பார்த்ததும் "கன்னித்தாய் கண்ணீர் சொரிகிறள்; கன்னித்தாய் கண்ணீர் சொரிகிறள்" என்று கதறத்தொடங்கினுள். அடுத்த அறையில் இருந்தவர்களைக் கூவியழைத்து: "மாமி, ஓடிவாருங்கள்; மதினி, ஓடிவாருங்கள்; கன்னித்தாய் கண்ணீர்சிந்துகிறதை ஓடிவந்துபாருங்கள்" என்று ஓலமிட்டாள். இந்த அபயக்குரல்கேட்டு அவர்களும் ஓடிப் போனார்கள். முதலில் அவர்கள்நம்பவில்லை. அவள் சும்மா பிதற்றுகிறாளென்று நினைத்தார்கள். ஆனால், பிறகு கிட்டப்போய்ப் பார்த்தபோது, உள்ளபடியே சுரூபம் கண்ணீர்சிந்துவதைக் கண்ணாரக்கண்டு ஆச்சரியப்பட்டார்கள். உடனே இச்செய்தி காட்டுத்தீ போல மடமடவென்று ஊர்எங்கும் பரவியது. திரளானசனங்கள் வந்து கூடினார்கள். வந்தவர்களெல்லாரும் கன்னித்தாய் கண்ணீர்சிந்தும்புதுமையைக் கண்ணாரக்கண்டார்கள். இவ்விதம் விட்டுவிட்டு நான்குநாள் கண்ணீர்வடித்தது.

அந்தோனியம்மாளின் கணவன் ஆஞ்சலோ ஓர்பொல்லாதமூடன். வெளியேபோயிருந்தவன் அப்பெருஞ்சனக்கும்பலைக்கண்டு மிகுந்தகோபங்கொண்டு சுரூபத்தைஎடுத்து உடைக்கப்பார்த்தான். ஆனால், கிட்டப்போனதும் கண்ணீர்வடிகிறதைக் கண்டதே கண்கலங்கிக் கைநடுங்கி ஒன்றுஞ்செய்யவில்லை. தற்போது இந்தப்புதுமையுள்ள சுரூபம் நகரின்மத்தியிலுள்ள "பியாசா யூரிப்பிடி" என்ற சதுக்கத்திலே அலங்காரமிக்க உயர்மேடைஒன்றிலே நறுமணங்கமழும் புஷ்பங்களின்மத்தியில் பூச்சியமாகவைத்துப் பூசிக்கப்பட்டு வருகிறது. நாலாதிசைகளிலுமிருந்து திருயாத்திரிகர்கள் வரத்தொடங்கியிருக்கிறார்கள். அநேக புதுமைகள் நடக்கின்றன.

நாம் சிறக்கூஸ்நகர் அதிமேற்றிராணியாரான பறன்சினிஆண்டவரையும், பலர்மோநகர் அதிமேற்றிராணியாரான கருதினல் றுவ்வினிஆண்டவரையும்கண்டுபேசினோம். "கன்னித்தாய் சிந்தியகண்ணீர் மெய்யான மானிடகண்ணீர்என்பதற்குச் சந்தேகமில்லை; இது சுபாவத்திற்குமேலான ஓர்சம்பவம்என்பதற்கும் ஐயமில்லை; கன்னித்தாய் கண்ணீர்வடிக்கக் காரணமென்னவென்று திட்டவட்டமாகச் சொல்வதற்கில்லை; செப்பரியநவங்கள் நடப்பதுஉண்மை" என்று செப்பினார்கள்.

## கம். எதிர்க்கும் ஸ்தாபனம்

கம்யூனிஸத்தைச் சட்டவிரோதமானதாக ஆக்கும்விஷயமாய் உழைக்கக்கூடிய உலகஸ்தாபனம்ஒன்று இவ்வாண்டு மார்கழிமாதம் இலங்கையிலே நிறுவப்படவிருக்கிறது. இதன்ஆரம்ப கூட்டத்துக்கு உலகின் பலநாடுகளிலுமுள்ள அரசாங்கதலைவர்கள் அழைக்கப்படவிருக்கின்றார்கள். பிலிப்பைன்ஸ் நாட்டிலிருந்தும், பரிசுத்த பாப்பரசரிடமிருந்தும், மற்றும் பல ஸ்தாபனங்களிலிருந்தும் தூதுக்கோஷ்டிகள் வருமென எதிர்பார்க்கப்படுகிறது. பிரதமர் சேர்ஜோண் கொத்தலாவலஅவர்களே கூட்டத்தை ஆரம்பித்துவைப்பார்.

## வவுனியாவில் நெல்விலை

அரசாங்கம் நெல்லைப் புசல்ஒன்று 12 ரூபாவீதம்-அதாவது மூன்றரைப் புசல்கொண்ட ஓர்மூடைநெல்லை 42 ரூபாவீதம் விலைகொடுத்து வாங்குகின்றது. ஆனால், வவுனியாவிலே ஒரு மூடைநெல்லை அங்குள்ள மில்சொந்தக்காரர் 34 ரூபாமுதல் 37 ரூபாவரையில் விலைகொடுத்து வாங்குகின்றனர். முந்திய வருடங்களிற்போன்று இவ்வருடம் யாழ்ப்பாண வியாபாரிகள் அங்கு நெல்வாங்கப் போகாததே இந்த விலைஇறக்கத்துக்குக் காரணமென்று கருதப்படுகிறது. தற்போது நடைபெறும் அறுவடைமுடிந்ததும் வவுனியாச்சந்தையில் ஏராளமானநெல் விற்பனவுக்குக் கொண்டுவரப்படும்போது நெல்லின்விலை மேலும்இறங்கலாமென்று கமக்காரர் கவலைப்படுகின்றார்கள்.

## பயங்கர விமான விபத்து

லண்டனை நோக்கிச்சென்ற பி. ஓ. ஏ. சி. எனப்படும் பிரித்தானியவிமானம்ஒன்று சென்றசனிக்கிழமை சிங்கப்பூரைச்சேர்ந்த கலாங்விமானநிலையத்தில் விபத்துக்குள்ளாகி விழுந்து நொருங்கித் தீப்பிடித்துக் கொண்டது. இந்தவிபத்தினுல் அதிற் பிரயாணஞ்செய்த 41 பேரில் 31 பேரும்இறந்தனர். இறந்தவர்களில் இருபிரபல வங்கிஅதிபர்களும் அடங்குவர். இந்திய ஓவர்சீஸ்வங்கியின் நிர்வாகதலைவரான திரு. எம். டி. சி. சிதம்பரம் செட்டியார், இந்தியஐக்கிய கமேர்சியல்வங்கியின் டிஸ்திறிக்மனேஜரான திரு. ஏ. செண்குப்தஎன்பவர்களே அவ்விருவருமாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"FULGENS CORONA"

# "மகிமைமுடி" என்னும்

## பாப்பரசரது பொது நிருபம்



(சென்றவாரத் தொடர்ச்சி)

### 1—தொடர்பான கிறீஸ்துவ பாரம்பரியம்

நமது திருச்சபைத்தலைவர் இப்புதிய விசுவாசசத்திய நிர்ணயமானது (கிறீஸ்துவ) கத்தோலிக்கசத்தியத்தில் சகல விசுவாசிகளாலும் உறுதியாகவும், பிரமாணிக்கமாகவும் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டுமென்று வழுவாவரமுள்ள முழுஅதிகாரத்தோடு தமது அப்போஸ்தலிக்க நிருபத்தில் ஓர் உண்மைச்சத்தியமாக விதித்து வெளிப்படுத்தும்போது, முழுத்திருச்சபையிலும் அதன் ஆரம்பத்தொட்டுப் பன்னூற்ருண்டுகளாக முறைமையாகத் தொடர்ந்துவந்த பிதாப்பிதாக்களின் போதனைகளை அவதானித்தும், நுணுக்கமாக ஆராய்ந்தும், அனுவதித்துமே இதனை வெளியிட்டார்.

### வேதாகமத்திலுள்ள மூலஆதாரம்

சகலத்தையும்படைத்த பரமபிதா ஆதாமின் துக்ககரமான விழுகைக்குப் பின் சோதனைகாரனும், கெட்டவனுமான பாம்புருவெடுத்த பிசாசைச் சபித்து: "உனக்கும் அந்தஸ்திரீக்கும், அவள்வித்துக்கும் உன்வித்துக்கும் இடையில் பெரும்பகைமையை யுண்டாக்குவோம்" என ஆணையிட்ட வார்த்தைகள் கன்னிகையான தேவதாயாரையே குறித்துச் சொல்லப்பட்டவையெனப் பிதாப்பிதாக்களும், வேதசாஸ்திரிகளும், விரித்துரையாளரும், ஒருவாய்ப்படச் சாற்றுகின்றனர். நாம் குறித்துப்பேசும் இவ்விசுவாச சத்தியத்திற்குப் பரிசுத்தவேதாகமத்தில் குறிக்கப்படுவதே அத்திவாரமும், மிகமுக்கியமுமான தொன்ருகத் தோன்றுகிறது.

மேலும், மனுக்குலத்தைத் தொடர்ந்துவரும் சென்மதோஷத்தினுலே பரிசுத்தகன்னிமரியாய் தனதுஉற்பவத்தில் களங்கமுற்றகாரணத்தால் ஒருகணமாவது வரப்பிரசாதமற்றவளாய், பாவத்துக்கடிமையாய் எப்போதாவது இருந்திருப்பாளேயானுல், சலமோன் இராசாகாலமட்டான அதிபூர்வகாலந்தொட்டு இற்றைவரை தேவகன்னிகைக்கும், பாம்புக்கும் நித்தியமாகப் பகைமையாக்கும் 'மாசில்லாத உற்பவம்' என்றபேச்சே ஒருபோதும் இடம்பெற்றிராது. அதற்குமாருய் ஒருமுறையாவது பிசாசுக்கு அடிமைப்பட்டவள்என்ற இழிச்சொல்லுக்குரியவளாவாள். அன்றியும் தனிப்பெருமையளிப்பதும், பக்தியூட்டுவதுமான இச்சத்தியத்தைப் "பரிசுத்தகன்னிகை அருள்நிறைந்தவள் என்றும், ஸ்திரீகளுக்குள்ளே ஆசீர்வதிக்கப்பட்டவள்" என்றும் இன்னனபல புகழ்வார்த்தைகளின் காலம்தொட்டுக் கதோலிக்கர் பரம்பரையாக அழியவிடாது காப்பாற்றிக்கொண்டு வருகின்றனர். இச்சத்தியம்ஒன்ருல் தேவனின்தாய் எல்லாப் பரிசுத்த ஆருள்களுக்கும் இருப்பிடமாகவும், ஒருபோதும் எவருக்கும் அடிமைப்பட்டுச் சபிக்கப்பட்டவளாகாது இருக்கத்தக்கதாகப் பூரணஒன்றிப்பாகவும், முடிவில்லாத அளவுக்கு அளவற்ற இன்பசாகரமான கொடைகளின் ஊற்றணியான திவ்விய ஆவியினது சகலவரங்களாலும் அலங்கரிக்கப்பட்ட மோட்சஅலங்காரியாகவும் விளங்குகிருள்என்றே ஊகிக்கவேண்டும்.

ஆதித்திருச்சபையிலே ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்ட இந்தமேலான சத்தியநிர்ணயத்தைக் குறித்தே பரிசுத்தகன்னிகையை, 'அற்புதமும் கேடுருத பரிசுத்ததலமான சிங்காரத்தோப்பின் முட்களுள்முளைத்த லீலிமலர், மாசில்லாதவள்என்றும், ஆசீர்வதிக்கப்பட்டவள், பாவமாசு அணுகாதவள், வாடாதவிருட்சம் என்றும், தூயநீர் ஊற்று, மரணத்துக்கெதிராகச் சீவியத்தினின்றுஉதித்த உத்தமி, பகையினின்றின்றி வரப்பிரசாதத்தினின்று உதித்தமுளைஎன்றும், பழுதுருக் கன்னி, பாவிகளுக்குத் தூய்மையும், புதுமையுமானவள், அழகிலும்சிறந்த அழகு, பரிசுத்தத்தின பரிசுத்தம், எல்லாருக்கும்மேலாக என்றும் கடவுளை எதிர்நோக்கிஇருப்பவள், தானேயான தனிப்பெரும் பரிசுத்தம், இயற்கையாகவே அழகுறை அலங்காரி, நவவிலாசதூதுவர் கணங்களிலும்மேலாக மகாபரிசுத்தமும், பிரசாதபூரணியுமானவள்' என்றும் இவ்வாறே பரம்பரையாகப் பிதாப்பிதாக்களும், தீர்க்கதரிசிகளும் பலவாருகப் போற்றிவந்தார்கள். இவ்வண்ணமாகப் பரிசுத்த கன்னிமரியாய் விசேஷபுகழ்ச்சிக்குரியவளாய்ப் பேணப்படுவதாயிருந்தால், எந்த வினடிப்பொழுதுக்கும் சம்மனசுகளைவென்ற தூய்மையுடையவளாய், பாவமாசுக்கு அடிமைப்படாக் கன்னிகையாய் வாழ்ந்திருக்க மாட்டாள் என்று சொல்ல யார்தான் துணியக் கூடும்!

இதன்நிமித்தமே எவ்றேம் (Ephræm) என்னும்பெரியார் அவளுடைய பரிசுத்த குமாரனைநோக்கி: "நிச்சயமும், சத்தியமுமாக நீரும், உமதுதாயாரும்மாத்திரம் பூரணஅழகுடையவர்கள்; உம்மிலோ, அன்றேல் உமது தாயாரிலோ எவ்வித அற்பமாசும் இல்லை" என்று புகழ்ந்தார். இவ்விதமானபுகழ்மாரியால் தேவனின் தாயாராக உயர்த்தப்பட்ட, எவருக்கும்கிட்டாத ஒருதனிப்பெருமையைப் பெற்றவளான கன்னிமரியாய் சகலசாதி சனங்களுள்ளும் மகாபரிசுத்தவதியாய்—பாவத்தின்நிழல்தானும் அணுகக்கூடும்என்ற பேச்சுக்கே இடம்பெருதவளாய் இருக்கிருள்என்பது தெளிவாகப் புலப்படுகின்றது.

### உன்னத அந்தஸ்தும் அதன்மகிமையும்

நெஸ்தோரியர் (Nestorious) என்ற பதிதரின் கொள்கையைமறுத்து எபேசஸ் (Ephesus) சங்கம் அறிக்கையிட்டு உறுதிசெய்த இந்தமகத்தான சத்தியமானது பரிசுத்தகன்னிமரியாய் கிறீஸ்துநாதருக்கு அடுத்தாற்போல் இருக்கக்கூடிய அதிமேலான அந்தஸ்தில் அருள்நிறை பூரணியாய், பாவமாசு அணுகாத ஆன்மசீவியாய்இருப்பதை நன்குபுலப்படுத்துகின்றது. ஆம் உண்மையாகவே, இவ்வுயர்நிலையானது நிர்மலமாக அமைந்த மூலாதாரமானமையின், சகலவித தெரிபலான வரங்களாலும், உபகாரங்களாலும் அவளின் ஆத்துமமும், சீவியமும் அசாதாரண முறையிலும், அளவிலும் அலங்கரிக்கப்பட்டுள்ளதையே எடுத்துக்காட்டுகின்றது

ஏனெனில், "அளவில்லாதநன்மையே சுரூபியான தேவனின் தாயானமையால் பரிசுத்தகன்னிகையான மரியம்மாளும் அந்தநன்மையில் விசேஷ நன்மைப்பங்குக்கு உயர்த்தப்பட்டுள்ளாள்" என அக்குயினஸ் (Aquinas) கூறுகிருர். இவரது கூற்றைப் பேர்போனஎழுத்தாளர் விரித்து விளக்கும் போது, "பரிசுத்தகன்னிகை ...... தேவனின்தாய்; ஆனபடியால் அவள் மகாபரிசுத்தமுள்ளவள்; தேவனின் சித்தத்தால் உண்டாக்கப்பட்ட இந்த உன்னதமகிமையான அந்தஸ்தை நம்மால் பூரணமாக விளங்கிக்கொள்ள முடியாதாமே" என்று எழுதுகிருர். மேலும் இந்தவிடயத்தை மிகுந்த அவதானத்துடன் ஆராயின்—இன்னும் மேலாகச் சந்தேகமறத் தமது ஏககுமாரனின் தாய்க்கென்று வாரிஅளிக்கக் காந்தலாயிருந்த சர்வவல்லபமுள்ள தேவபிதாவின் சுவாலைவிட்டெரிந்துகொண்டிருக்கும் மதுரமான நேசப்பெருக்கத்தையும் யோசிப்பின் பரிசுத்தகன்னிமரியாய் ஒருகணமேனும் பாவத்துக்கு அடிமையாய், அன்றேல் அருள்நிறைந்துதேங்கும் நிலைக்குப் புறம்பானவளாய் இருந்திருப்பாள் என்று எண்ண எப்படி இடமுண்டாகும்?

(தொடரும்)

# தேவகைத்தாதையின் சிறப்பு

அறுசீர் விருத்தம்

1

மன்னவன் தாவீதென்போன் மரபுவா லிபர்கள்தேவ
கன்னியை மணக்கவந்தே கையினிற் கோலுமேந்தப்
பொன்மலர்ச் சூசைகோலைப் பூத்திடச் செய்ததேவன்
அன்னையை தன்னைக்காக்க அவரையே தெரிந்தார்அன்ருே!

2

கன்னிகைத் துணைவிஏது கற்பம தானுள்என்று
தன்னுளே எண்ணியேங்கித் தண்டனை கேள்வியின்றி
மென்மனம் குழையவேக வேற்றிடம் செல்லஉன்ன
மின்னிடும் தூதன்சொல்லால் விடுத்தனன் போதல்அன்ருே!

3

தேசமாம் பெத்லகேமைத் தேடியே செல்லவேண்டி
வேசரி மீதுதாயை விளங்கிட வேற்றிமற்றும்
தாசனைப் போலத்தானும் தலைக்கயி றெடுத்துச்சென்ற
நேசனைச் சூசைதன்னை நிகர்த்தவர் வேறுயாரோ!

4

தூதுவன் துயிலிற்ருேன்றிச் சொல்லிட எழுந்துதூய
மாதுடன் மைந்தனுரை மன்னவன் கொடுமைக்கஞ்சித்
தீதுகள் நேராவண்ணம் சேமமே எகிப்துசேர்த்த
ஆதுல னனதீர அப்பரும் சூசைஅன்ருே

5

கத்தனல் உலகிற்ருேன்றிக் கத்தனை வளர்த்துவைத்துக்
கத்தனின் தாயைக்காத்துக் கத்தனுக் காகவாழ்ந்து
கத்தனின் மடியிற்சாய்ந்து கத்தனை அடைந்தவந்தக்
கத்தனின் தாதைசாவைக் காசினி யார்பெற்ருரே!

6

யேசுவும் இறையோன்எண்ணில் ஏத்திடும் மாலைதந்த
மாசுணம் மிதித்ததாயும் மாசிலாப் பிறவிஅன்ருே!
ஆசுடன் உதித்தார்யார்தான் அவனியிற் சூசைபோலத்
தேசுடன் திகழ்ந்தார்ஞானத் திருவருள் நிறைந்துவாழ்ந்தார்?

'யுவன்'

—எகிப்திலே கெய்ருேநகரிலிருந்து அலெக்சாந்திரியா நகர்வரையில் கம்யூனிஸ்தர்கள் மிகமும்முரமாக வேட்டையாடப்படுகின்ருர்கள். பொலிசார் கம்யூனிஸ்தபிரசுரங்களைக் கைப்பற்றி மூன்றுகம்யூனிஸ்த தலைவர்களைக் கைதுசெய்திருக்கின்றனர். சமீபகால முதல் அப்பகுதியிலே கம்யூனிஸ்தர்களின்தொல்லை அதிகரிக்கிறதாம்.

* * *

— இந்தமரியாயின் வருடத்திலே லூர்துதிருப்பதிக்கு முன்னிலும்அதிகமான யாத்திரைகள் நடத்துவதற்குத் திட்டங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. இவ்வருடத்திலே 26கருதினுல்மாரும், நூற்றுக்குமேற்பட்ட அதிமேற்றிராணிமார், மேற்றிராணிமாரும் பல்வேறு யாத்திரைக் கோஷ்டிகளுடன் சேர்ந்து லூர்துகெபியைத் தரிசிப்பார்களென்று எதிர்பார்க்கப்படுவதாய்ச் செய்திவெளியாகியிருக்கிறது.

### நன்றியறிந்த தோத்திரம்

திருஇருதயஇராசாவிடமும், சதாசகாய மாதாவிடமும் நாங்கள்கேட்ட மன்ருட்டு அனுகூலமானதற்காக நன்றி. திருஇருதயஇராசாவுடைய ஆசீரும், சதாசகாய மாதாவின் இரக்கமும் எங்கள் குடும்பத்தில் என்றும்இருக்க மன்ருடிநிற்கிறேன்.

மாதாவின் அடிமை

* * *

### நன்றியறிந்த தோத்திரம்

எனது குழந்தைக்குச் சிலநாட்களின்முன் ஏற்பட்டிருந்த கடுமையான நோய் பரிசுத்த சதாசகாய மாதாவினதும், கோடியற்புதராம் அர்ச். அந்தோனியாரதும் மன்ருட்டினுல் குணமாகியது. நேர்த்திப்படி இதனைப் பிரசுரிக்கிறேன். பரிசுத்த சதாசகாய நாயகியின் மகிமை எங்கும் புகழப்படுவதாக.

தலைமன்னுர்

### அர்ச். பிரான்சீஸ்குவின்

## மூன்ருஞ் சபை

அர்ச். பிரான்சீஸ்குவின் மூன்ருஞ் சபை மாதாந்தகூட்டம் இம்மாதம் 26-ந் திகதி பிற்பகல் 4 மணியளவில் அர்ச். சூசையப்பர் சிற்ருலயத்தில் நடந்தேறும். அவ்வமயம் 11 பேர் ஆயத்த அந்தஸ்தில் சேர்க்கப்படுவார்கள். மகாவந். மேற்றிராணியாண்டவர் அவர்கள் கூட்டத்துக்குச் சமுகங் கொடுக்க விருப்பதாலும், அங்கத்தவரெல்லோரையும் பிரதிமைப் படம் பிடிக்கவிருப்பதாலும் தயவுசெய்து எல்லோரும் தத்தம் முழுஉடைகளையும்கொண்டு நேரகாலத்தோடு சமுகங் கொடுக்கும்படி கேட்டுக்கொள்ளப் படுகிருர்கள். சித்திரைமாதம் பரிபூரண பலன்கள் அடையக்கூடியநாட்கள் :— 4, 16, 18, 21, 23, 24, 28,(3) 30.

A. S. FRANCIS OF MARY
for Director

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பாலர் பக்கம்

## எதனாலே?

'ஜெயம்'

1. கொலையும், பழியும் எதனாலே?
கொல்லும் பகைமை எதனாலே?
விலையில் லாதநல் லன்பென்னும்
விளைவில் லாத நிலையாலே.

2. பொய்யும், புரட்டும் எதனாலே?
பொல்லாத் திருட்டும் எதனாலே?
உய்வும் உயர்வும் தருகின்ற
உண்மை போற்றாக் குறையாலே.

3. வஞ்சம், சூதும் எதனாலே?
வாழ்விற் சபடம் எதனாலே?
நெஞ்சிற் தூய நினைவென்னும்
நிகரில் செல்வக் குறைவாலே.

4. அழிவுக கலகம் எதனாலே?
அணுக்குண் டெல்லாம் எதனாலே?
அழிவில் லானை அமலோனை
அகிலம் மறந்த(து) அதனாலே.

## அண்ணா சொல்வது:

அருமைச் சகோதரங்களே!

இம்மாதம் 19-ந் திகதியாகிய நாளை வெள்ளிக்கிழமை அர்ச். சூசையப்பர் திருநாள். அர்ச். சூசையப்பர் திருஇரட்சகரின் கைத்தாதை. அதாவது யேசுவை வளர்த்த தகப்பன். தேவமாதாவின் திருப்பத்தா. நசரேத்தில் சீவித்த திருக்குடும்பத்தின் தலைவர். தேவகுழந்தையின் முதற்பார்வையும், முதல் அரவணைப்பும் தேவதாயாருக்குப் பின் இவருக்கே கிடைத்தன. இதைக் கொண்டு இந்தப் பெரிய அர்ச்சியசிஷ்டரின் மகத்துவம் எத்துணை மேம்பாடு உடையது என்பதைக் கண்டு கொள்ளலாம். இன்று மோட்ச திரவியங்கள் எல்லாம் இவரிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன. அதனுல் அவரின் உதவியைத் தேடி உங்களுக்கு வேண்டியவைகளை அவரிடம் கேட்டுப் பெற்றுக்கொள்ளுங்கள்.

இவருடைய திருநாளில் உங்களைப் பெற்று வளர்க்கும் தந்தையை நினைவு கூருங்கள். அவர் உங்களுக்கு ஊண், உடை தேடித் தருகிறார். உங்களுக்கு வருத்தம் வந்தால் மருந்து தேடித் தந்து பாதுகாக்கிறார். உங்கள் படிப்பைப் பற்றியும், உங்களை மேல் நிலையில் வைக்க வேண்டும் என்றும் கவலையாய் இருக்கிறார்.

உங்கள் தகப்பனர் தமது ஓய்வையும், சொகுசையும் கவனியாமல் உங்களுக்காகப் பாடுபட்டு உழைக்கிறார். இவ்வளவு நன்மை செய்கிற உங்கள் தகப்பனுரை நீங்கள் நேசித்துச் சங்கிக்கிறீர்களா? அவருக்கு அமைந்து வருகிறீர்களா? அவர் உங்களைத் தண்டிக்கும் பொழுதும், திருத்தும் பொழுதும் பொறுமையுடன் நடந்து கொளளுகிறீர்களா? அவருடைய சுக சேமத்துக்காக மன்ருடுவது உங்களுக்குக் கடமை அல்லவா?

ஆகையால், சகோதரங்களே! சஞ்சூசையப்பர் திருநாளில் உங்கள் தகப்பனுரை நினைத்து அவருக்காக மன்ருடுங்கள். அன்று பூசை கண்டு, சற்பிரசாதம் உட்கொண்டு, உங்கள் தகப்பனுரின் ஆத்தும, சரீர நன்மைக்காக ஒப்புக் கொடுங்கள். (குடும்ப சகிதமாகக் கோவிலுக்குப் போவது நல்லது) இத்தினத்தை அப்பா தினமாகக் கொண்டாடுங்கள். உங்கள் நேசத்தையும், நன்றியையும் அவருக்குக் காண்பிக்க இதுவே தகுந்த தினம். அவருடைய அறையை வடிவாக அலங்கரியுங்கள். வீட்டில் அம்மாவிடஞ் சொல்லி விருந்து ஒன்று தயார் செய்து, அப்பாவைத் தலைமையில் வைத்துச் சாப்பிடுங்கள். நீங்கள் பாடசாலையில் கற்றுக் கொண்ட ஆடல் பாடல்களை அப்பாவுக்குப் படித்து நடித்துக் காட்டி உங்கள் அன்பையும, அமைச்சலையும் அவருக்குத் தெரிவியுங்கள். 19-ந் திகதி வசதி இல்லாவிடில், அடுத்த ஞாயிற்றுக்கிழமை அனுசரிக்கலாம். சுபம்!

உங்கள் அன்புள்ள, அண்ணா.

## போதும் உங்கள் வாய்வீரம்

ஒரு கிராமத்திலே ஓர் கிழவன், கிழவி, இரு பேரப்பிள்ளைகள் ஆகிய நால்வர் வசித்து வந்தார்கள். கிழவன் பொழுது பட்டதும் தனது தோட்டத்தில்சென்று புகையிலைப் பாத்தியைக்காவல்செய்துவருவான். அங்கு ஆடுமாடு கட்டும்தொட்டிலிலே படுத்துக் கொள்வான். ஓர்நாள் கிழவி அவனைப்பார்த்து: "நீங்கள் தோட்டத்திலே நித்திரை கொள்ளுகிறீர்களா, அல்லது முழிப்பிருக்கிறீர்களா" என்று கேட்டாள். அதற்குக் கிழவன்: நான் நித்திரையோ, முழிப்போ என்பதைத் தோட்டத்தில் வந்து பார்த்தால் தெரியும்; ஆராவது திருடர் வந்தால் தலையைப் புகையிலைப் பாத்திக்குப் பசளையாக்கி விடுவேன் என்று கெட்டித்தனம பேசினுன்.

பேரப்பிள்ளைகள் இதைக் கேட்டுவிட்டு இரண்டுநாள் சென்றபின் ஓர் கத்தியுடன் தோட்டத்துக்குப் போனுர்கள். அப்பா குறட்டை விட்டுக்கொண்டு நித்திரை செய்வதைக் கண்டு, ஒருவன அவர் தலைமாட்டில போய்க் கத்தியுடன் நின்ருன். மற்றவன் புகையிலைப் பாத்திக்கு அருகில் போய்க் குந்தி இருந்து கொணடு: "டேடே, புகையிலைக் கன்றுகளைக் கெதியாய்ப் பிடுங்கடா; கிழவன் எழும்பினுல் குடிகெட்ட காரியம்; தலையைக் கொய்துவிடுவான்" என்று சொல்லும் பொழுது, அப்பா கண்ணைத் திறந்து எழும்பப் பார்த்தார். கிட்ட நின்றவன் அடைத்த குரலுடன்: "ஏ, கிழவா! சத்தம் கித்தம் போட்டால் தலை பறந்து போய்விடும்; பேசாமல் கண்ணை மூடிக் கொண்டு படுத்துக்கொள்" என்ருன்.

கத்தியைக் கண்டதே கிழவன் பயத்திஞல் கண்களை மூடிக் கொணடான். சற்றுநேரம் சென்றபின் "ஐயோ, தெய்வமே! புகையிலைக் கன்றுகளையெல்லாம பிடுங்கிக் கொண்டல்லோ போகப் போகிருர்கள் என்று நினைத்து வாயைத் திறந்து: அண்ணைமாரே! தம்பிமாரே! உங்களை இருகையும் எடுத்துக் கும்பிட்டேன்; முழுவதையும் பிடுங்க வேண்டாம்; எங்களுக்கும் கொஞ்சம் விட்டுவிட்டுப் போங்களடா; பெரிய புண்ணியமாய் இருக்கும்" என்ருன். பிறகு அவர்கள் இருவரும் மெதுவாக அவ்விடத்தை விட்டு நழுவி வீட்டிற்குப் போய்ப் பேத்தியிடம் நடந்ததெல்லாம் சொல்லிச் சிரித்தார்கள்.

சற்று நேரம் சென்று அப்பா கண்ணை மெதுவாகத் திறந்து பார்த்தார். ஒருவனையும் காணவில்லை. பரபரப்புடன் எழுந்து: "கள்ளனடா, கள்ளனடா" என்று சத்தம் போட்டுக்கொண்டு வீட்டுக்கு ஓடிப்போனுர். உடனே பேரப்பிள்ளைகள் விளக்குடன் பொல்லும் கல்லுமாய் அப்பாவிடம் ஓடிச்சென்று "என்ன அப்பா, என்ன நடந்தது?" என்று ஆத்திரமாகக்கேட்டார்கள். அப்பா நடுங்கிக்கொண்டு "புகையிலைப் பாத்தி போய் விட்டதடா; யாரோ கன்றுகளைப் பிடுங்கிக் கொணடு போய்விட்டாங்களடா" என்ருர். அவர்கள் அப்பாவையும் அழைத்துக் கொண்டு தோட்டம் முழுவதும் தேடிவிட்டுப் பிறகு புகையிலைப் பாத்தியைப் போய்ப் பார்த்தார்கள். எல்லாம் அப்படியே இருந்தது. அப்பா நாடியிலே கையை வைத்து: "இதுஎன்ன அச்சரியம்; வந்தவர்கள் யாராய் இருக்கலாம?" எனருர்.

கிழவி அவரைப் பார்த்து: அன்றைக்கு ஏதோ கெட்டித்தனம்எல்லாம் பேசினீர்களே; இப்ப எப்படி? இது உங்கள் பேரப் பிள்ளைகளின் கெட்டித்தனம் என்று சிரித்தபடி சொன்னுள். "மெய்தானு? கருமம் இப்படி என்று தெரிந்திருந்தால் என்ன செய்திருப்பேன் தெரியுமா?" என்ருர். கிழவி உடனே: "போதும் உங்கள் வாய்வீரம்" என்ருள். அப்பா வெட்கத்துடன் தலைகுனிந்து திரும்பவும் போய்த் தொட்டிலில் படுத்துக்கொணடார். கூர் அம்பாயினும் வீரியம் பேசேல்!

பி. இராசபதி

## யேசு பிசாசைத் துரத்துகிருர்

நீங்கள் எப்போதாவது பிசாசைப் பற்றிச் சிந்தித் திருக்கிறீர்களா? அவன் கெட்டுப்போன தூதன். மனிதரைக் கெடுத்துச் சாவான பாவத்தின் வழியாய் அவர்கள் தேவ நேசத்தை இழக்கச் செய்வது அவனுடைய ஓயாத தொழில்.

ஒருமுறை யேசுநாதர் போதித்துக் கொண்டு இருக்கும் பொழுது சனங்கள் அவரைக் கவனித்துக்கொண்டிருந்தார்கள். அவர் ஒருமனிதனில் குடிகொண்டிருந்த பிசாசை ஓட்டினுர். சருவேசுரனுடைய வல்லமையினுல் மாத்திரம் பிசாசை ஓட்ட முடியும் என்று யேசு சனங்களுக்குப் படிப்பித்தார். சருவேசுரன் பிசாசைக் கலைக்கிற படியால் அவர் பிசாசைவிட அதிகம் பலம் உள்ளவர். யேசு சருவேசுரன்.

பின்பு, பிசாசு கலைக்கப் பட்டபின் அவ்விடத்திற்குத் திரும்பிவர எத்தனிக்கிறதுஎன்று அவர் சனங்களுக்குச் சொன்னுர். பிசாசை எப்போதும் எதிர்க்கவேண்டும் என்று யேசு படிப்பிக்கிருர்.

(ஞாயிறு சுவிசேஷத்[illegible])

## எங்கள் விநோதப் பிரயாணம்

27-2-54 அன்று ஆசிரியர், மாணவர் அடங்கிய சுமார் நூறுபேரைக் கொண்ட கோஷ்டி ஒன்று சண்டியை நோக்கி ஓர்விநோதப் பிரயாணம் நடத்தியது. அதில் நானும் கலந்துகொணடேன். நாங்கள் புறப்படும் போது அதிகாலை 2 மணி. இந்தச் சாமவேளை இயற்கைஅன்னை எங்கள்மேல் கடுங்குளிரை விட்டு எங்களைக் கொடுகொடுக்கச் செய்தாள். வழிநீளம் மரஞ் செடிகள் வந்தனம்பாடி எங்களை வரவேற்றன. சில தருக்கள் நடனமாடின. நாங்கள் கும்மிருட்டிலே இவைகளைக் கண்டும் காணுதவர்கள் போல் கடந்து சென்று காலை 6 மணிக்குக் கேகாலையை அடைந்தோம். அங்குள்ள ஆலயத்தில் திவ்வியபூசை கண்டு, காலைப் போசனம் அருந்தி மீண்டும் பிரயாணமாய் வயல் வெளிகள், மலைக்கூட்டங்களைக் கண்டு ரசித்தவண்ணஞ் சென்று இடையிலே குறுக்கிட்ட ஓர்தேயிலைத் தொழிற்சாலை சென்று அதைப் பார்த்தோம். பின்னர் புறப்பட்டுப் போகையில் பலஇயற்கைக் காட்சிகளைக் கண்டு, பல இனிய கீதங்கள் இசைத்து ஒருவாறு போராதனையைப் போய்ச் சேர்ந்தோம். அங்குள்ள பேரான பூந்தோட்டத்தைச் சுற்றிப் பார்த்தோம. புகைப் படங்கள் பிடித்தோம். பூங்காவின் அருகே ஓடும் மகாவலி கங்கையைக் கண்டோம். நதியைக் கடக்க அந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரத்தில் போடப்பட்டிருக்கும் தூங்கு பாலத்தில் ஏறிச் சென்றோம். அதிற் செல்ல ஒரே பயமாய் இருந்தது. பின்னர் சர்வகலாசாலையைப் பார்த்து அப்பூங்காவை விட்டுப்பிரிய மனமின்றியே பிரிந்துசென்று தேயிலை உற்பத்திவேலைகள், நதிகள், மலைத் தொடர்களைப் பார்த்துக்கொண்டு 12 மணிக்குக் கண்டியை அடைந்தோம். பகற் போசனம் அருந்தியபின் 2 மணியளவில் புறப்பட்டுப் புராதன குளங்கள், கட்டிடங்களைப் பார்த்து, விநோதக் கலைக் கண்காட்சி நிலையஞ் சென்று பண்டைக் கால வீட்டுத் தளபாடங்கள், யுத்த தளபாடங்கள், அணிகலன்கள், விக்கிரகங்கள், நகைப் பெட்டிகள், பழைய நாணயங்கள், அசந்தா ஓவியச் சிற்பங்கள் முதலிய பல விநோதப்பொருட்களையும், முன்னோர் கல்விகற்ற, கற்களையும், சிலாசா சனங்களையும் கண்ணுற்றோம். இவற்றை யெல்லாம் ரசித்த பின் 3 மணியளவில் கொழும்பை நோக்கிப் பிரயாணமானோம். இவ்விதம் எங்கள் வினோதப்பிரயாணம் முடிவாயிற்று.

ஹில்டா தவேயிரா
அர்ச். அன்னம்மாள் பாடசாலை,
மேட்டுத்தெரு, கொழும்பு.

## முன்பின் அறியாத கிழவனர்

நியூயோக் நகரின் ஓர் கோடியில் இருந்த சிறு குடிசை ஒன்றில வயோதிபர் ஒருவர் வசித்து வந்தார். அவர் அப்போது கப்பலில் வேலை செய்தவர். ஆனால், இப்போது வறுமையும், இடைவிடாத பிணியும் அவரை உபாதித்து வந்தன. அவருக்கு உதவி செய்வார் எவரும் இல்லை. ஆஸ்பத்திரியிலும் அவருக்கு இடமில்லை என்றார்கள். ஏனெனில் அவர் பணம் இறுக்க முடியாத நிலையில் இருந்தார்.

ஓர் சிறுவனாய் இருக்கையில்தான் அவர் கோவில் முகம் பார்த்தது. கப்பலில் வேலை செய்கையில் கடவுளை மறந்து விட்டார். ஆனால், விசுவாசம அவர் இருதயத்தை விட்டு முற்றாக அகன்று விட்டதெனச் சொல்ல முடியாது. ஒரேயொரு காரியம் மாத்திரம் அவர்மனதில் நன்றாய்ப் பதிந்திருந்தது. அது அவாது தாயின் போதனைகளில் ஒன்று. "அர்ச். சூசையப்பர் மரிக்கிறவர்களின் பாதுகாவல்; நம்பிக்கையோடு அவருடைய மன்றாட்டின் உதவியைக் கேட்பவருக்கு எப்படியாவது கடைசியில் அவர் மோட்ச வாசலைத் திறப்பார்" என்று அந்த நல்லதாய் கற்பித்திருந்தாள்.

ஆகையால், தனக்கு நல்ல மரணம் கிடைக்கும்படி அவர் ஒவ்வொரு நாளும் அர்ச். சூசையப்பரைப் பார்த்து மூன்று பரமண்டல மந்திரமும், மூன்று பிரியதத்த மந்திரமும் சொல்லிவந்தார். கடலில் சென்றாலும் சரி, தரையில் நின்றாலுஞ்சரி, யாவராலும் கைவிடப் பட்டவராய்த் தனிக் குடிசையில் தனிவாசம் செய்தபோதிலும்சரி, இரு மந்திரங்களையும் தினமும மும்மூன்று முறை சொல்ல அவர் தவறவில்லை.

ஒருநாள் அவருடைய குடிசையின் கதவிலே யாரோ தட்டும் சப்தம் கேட்டது. பிறகு உள்ளே நுழைந்தார் ஓர் குருவானவர். வயோதிபர் ஆனந்தக் கண்ணீர் சொரிந்து அவரை வரவேற்றுக் கடைசித் தேவதிரவிய அனுமானங்கள் பெற்றார் பெற்றபின் அவரைப் பார்த்து: "சுவாமி, நான் இங்கு சாகக் கிடப்பதைத் தங்களுக்குத் தெரிவித்தது யார்?" என்று கேட்டார். "சிநேகிதா, நான் முன்பின் அறியாத ஓர் கிழவனரே" என்று சுவாமியார் பதில்கூறினர்.

"ஓ! அப்படியானால் அது அர்ச். சூசையப்பராய்த் தான் இருக்கவேண்டும்; நல்ல மரணவரம் கேட்டுச் சிறு வயதிலிருந்து நான் செய்துவந்த மன்றாட்டை அவர் கேட்டருளினார்" என்று சொல்லி, இன்னொரு முறை மூன்று பரமண்டல மந்திரமும், மூன்று பிரியதத்த மந்திரமும் சொன்னார்.

ஆகவே பிரிய சகோதரர்களே! நல் மரணம் தரும்படி அர்ச். சூசையப்பரைப் பார்த்துத் தினமும் மனாறுடிவாருங்கள். தம்மை நோக்கிச் சொற்ப செபம் செய்தவர்களுக்கே அவர் இந்த நன்மைகள் புரிந்தால், தமது பக்தர்களுக்கு அவர் என்னதான் செய்ய மறுப்பார்?

மேரி ஜோசேப்பின் மனுவேற்பிள்ளை
அர்ச். அன்னம்மாள்பாடசாலை,
மேட்டுத்தெரு, கொழும்பு.

## இதோ வருகிறேன்!

அன்று ஓர் வெள்ளிக் கிழமை. பாடசாலை முடிய இன்னும் ஐந்து நிமிஷம் இருந்தது. எல்லாரும்பரபரப்பாய் இருந்தனர். ஆனால், செல்வி மல்லிகாவை மட்டும் வகுப்பில் காணவில்லை. அவள் திவ்விய சற்பிரசாதப் பேழைக்கு முன்பாகப் படிக்கட்டில் அமைதத ஓர் சிலை போல் சோர்ந்த முகத்துடனும், கண்ணீர் சொரியும் கண்களுடனும் பின் வருமாறுசெபித்துக் கொண்டு இருந்தாள். "சகலமும் அறிந்த எனது அன்பரே! நான் அந்தக் குருவானவருடன் பேசியதுமுதல் என் மன நிலை மாறியதே; எனது சீவியமோ இரு தோணிகளில் கால் வைத்தாற்போல் இருக்கிறதே; ஒருபக்கம் உலக நாட்டம் என்னை இழுக்கிறதே; மறுபக்கம் உமது இனிய குரல் என்னை அழைக்கிறதே; அன்று நீர் எறிந்த அந்தக்கல் என்னை வாட்டுகிறதே; இனித் தாமதம் வேண்டாம், ஆண்டவரே! இதோ வருகிறேன்! உமது இனிய குரலுக்குச் செவி சாய்க்கிறேன்" என்று சொல்லித் தனது கண்ணீரையும் துடைத்துக் கொண்டு வீடுநோக்கிச் சென்றாள்.

அங்கு போய்த் தாயைக்கண்டதும்: "அம்மா நான் போகவேண்டும்" என்றாள். தனது மகளின் கலங்கிய கணகளைக் கண்ட அன்னை அவளை நோக்கி: "எங்கே? எதற்கு? யாருடன்? செலவுக்கு எவ்வளவு வேண்டும்?" என்று பலகேள்விகளை அடுக்கினாள். "அப்படி ஒன்றும் இல்லை அம்மா; என்னை ஆண்டவர் அழைக்கிறார்; நான் அவருக்கு ஊழியம செய்யப் போகவேண்டும்; எனக்கு மனப்பூர்வமாக விடை தாருங்கள்" என்று இரந்தாள் மல்லிகா.

மகளே! தகப்பன் இல்லாத இந்த ஏழைக் குடும்பத்தைக் காப்பது யார்? உனது உழைப்பே இதுகாறும் நமது குடும்ப வாழ்க்கையைக் கொண்டு நடத்தியது உனக்குத் தெரியாதா? நீ சிறு பிள்ளையா? இந்த விழல் எண்ணத்தை விட்டுவிடு, என் கண்ணே" என்றாள் அன்னை.

அம்மா, கல்லினுள் தேரைக்கும் ஒசீவனம் அருளும் தேவன் நமது குடும்பத்தைக் கைவிடப் போகிறாரா? இப்போது தங்கைச்சி பரீட்சையில் சித்தி அடைந்திருக்கிறாள்தானே; அதனால் எனது இடமாக அவள் படிப்பித்து உழைத்து நமது குடும்பத்தைக் காப்பாற்றுவாள் அம்மா; நீங்கள் இப்போது என்னைப் போகவிடா விட்டால் என் மனவேதனை காரணமாக இன்னுஞ்சில தினங்களில் நான் நோய்வாய்ப் பட்டுப் போவேன்; அதற்குச் சம்மதம் என்றால் நீங்கள் தடை செய்யலாம்" என்று தாயின்மனதிலே அழுந்தத்தக்கதாய்ச் சொன்னாள் மல்லிகா.

மறுத்துப் பேச அன்னை விரும்பவில்லை. "கடவுள் உன்னை அழைத்தால் உன் விருப்பப்படி போகலாம்; அங்கு சந்தோஷமாய்க் காலங் கழிக்கத் தேவன் உனக்குத் துணை புரிவாராக" என்று சொல்லி மகளை ஆசீர்வதித்து அனுப்பினாள் தாய்.

மல்லிகா அடுத்த நாளே கன்னியர் மடத்தை நாடிச் சென்று இப்போது ஓர் உத்தம கன்னியாஸ்திரியாக விளங்குகின்றாள்.

B. S. P.

பிள்ளைகளே!

இம்மாதம் 25-ந் திகதி என்ன திருநாள் என்று உங்களுக்குத் தெரியுமா? கபிரியேல் சம்மனசானவர் தேவமாதாவுக்கு மங்களங் கூறின திருநாள். இது தேவசுதன் மனிதனாய் அவதரித்த தினம். அவர் குருத்துவ அபிஷேகம் பெற்ற தினம் என்றும் சொல்லலாம்.

அன்று உலகம் அடங்கலும் உள்ள குருமாருக்காக வேண்டிக் கொள்ளும்படி பரிசுத்த பிதா கேட்கிறார். மரியாயின் இந்தப் புனித வருடத்திலே இத்தினம் குருமார் தினமாக அனுசரிக்கப்பட வேண்டும் என்பதே பரிசுத்த தந்தையின் விருப்பம். அன்று கத்தோலிக்க குருமார் எல்லோரும் பரிசுத்த பிதாவின் கருத்துக்காகப் பூசைப்பலி ஒப்புக்கொடுத்துச் சகல குருமாருக்காகவும் மன்றாடுவார்கள்.



நீங்களும் அன்றுதினம் திவ்விய பூசைகண்டு, சற்பிரசாதம் உட்கொண்டு பரிசுத்த தந்தைக்காகவும், உங்கள் ஞானப் பிதாக்களுக்காகவும் மன்றாடுங்கள்.

### குருமாருக்காகச் செபம்

நித்திய குருவாகிய யேசுவே! பரிசுத்தமாக்கப்பட்ட உமது குருக்களை எவராவது தொடாதபடி உமது திரு இருதய அடைக்கலத்துக்குள் வைத்துக்கொள்ளும்.

உமது திருச் சரீரத்தை அனுதினமும் தொடுகின்ற அவர்களுடைய அபிஷேகிக்கப்பட்ட கரங்களை மாசணுகாமலும், உமது திரு இரத்தத்தினால் சிவக்கின்ற அவர்களுடைய உதடுகளைக் கறை அணுகாமலும் காத்தருளும். உமது மகிமைப்பிரதாப குருத்துவமென்னும் உந்நத முத்திரைபால் பூட்டப்பட்டிருக்கும் அவர்களின் இருதயங்களைப் பரிசுத்தமானவைகளாயும், லௌகீக வாஞ்சையற்றவர்களாயுங் காப்பாற்றியருளும்.

உமது தூய நேசமானது அவர்களைச் சூழ்ந்து உலக உடந்தையிலிருந்து காத்துக்கொள்வதாக. அவர்களுடைய முயற்சிகள் உமது ஆசீர்வாதத்தினால் பூரண சித்தியை அடைவதாக. அவர்களின் சேவையைப் பெறுவோர் இம்மையில் அவர்களுடைய ஆறுதலாயும், மறுமையில் அவர்களுடைய அழகான முடியாயு மிருப்பார்களாக, ஆமென்.

— அமெரிக்க ஐக்கியதேச மாஜி ஜனாதிபதியான திரு. ட்ரூமன் அவர்கள் தற்போது அதிகாரபூர்வமாக ஓர்எழுத்தாளராகவும், விரிவுரையாளராகவும், கமக்காரராகவும் இருந்து வருகின்றார். விருத்தாப்பிய வயதுப் பென்ஷன்உரிமைக்காக மனுச்செய்த போது, தாம்கமத்தொழில்செய்துவருவதாக அரசாங்க சமூகபாதுகாப்பு ஸ்தாபனத்துக்குத் தெரிவித்திருக்கிறார்.

## சூசை மாமுனிவர்

இல்லறத்திற்கும் துறவறத்திற்கும் புறம்பானதும், இரண்டையும் சேர்ப்பதுமான ஓர் இடைநிலைமை இருக்கலாமென்று ஞானக்கண் ஆற்றோர் அறியார். மெய்விவாகத்துடன் விரத்தத்துவத்தை இணைக்கமுடியும்; அதில் மனம்ஒன்றாகும்; மாமிசம் ஒன்றுவதில்லை. ஆன்மஇன்பங்களை இருவரும் நுகர்ந்து, சரீரஇன்பத்தைத் தேடாது விடுகின்றனர்.

தற்சமயம் மெய்விவாகஅந்தஸ்தில் இல்லாதோர்மாத்திரம் விரத்தத்துவவாக்குத்தத்தம் கொடுப்பார்கள். ஆனால், யூதரிடையிலும், சிலஉயரிய கிறீஸ்துவ சாங்கோபாங்கரிடையிலும் விவாகத்துடன் விரத்தத்துவமும் கைக்கொள்ளப்பட்டது. கன்னிமரியம்மாளும் சஞ்சூசைமாதவனும் அப்படிப்பட்ட ஓர்விவாகபந்தனத்தையே நிறைவேற்றினார்கள். இதில் ஒருவர்ஒருவருடைய சரீரத்துக்குரிய உரிமையைப் பாராட்டாது விடுத்தனர். மெய்விவாகத்தில் மாமிசஒற்றுமை வேண்டாற்பாலதுஅன்று. இது இருதயங்களின் ஒன்றிப்பல்லாது சரீரத்தினதுஅல்ல. ஏனெனில், "சதிபதிஅன்பின் அத்திவாரம் மனங்களின்ஒன்றிப்பு" என்கிறார் அர்ச். அகுஸ்தீனார். இதுவிண்மீன்களின் (நட்சத்திரங்களின்) ஐக்கியத்தையொக்கும். ஏனெனில், அவைகளின்வெளிச்சம் ஆகாயத்தில் ஒன்றுபட்டாலும், அவைகள் பிரிவாயிருக்கின்றன. மேலும்அது நந்தாவனத்தின் நறுமணத்தைப்போன்றது; மலர்கள் தனித்துநிற்க மணங்கள்கலக்கின்றன.

கன்னிமரியாயும், சூசைமாதவரும் விரத்தத்துவவாக்குச் செய்திருந்தால், விவாகபந்தனத்தில் ஏன் ஈடுபட்டார்கள்? இதற்கு முதற்காரணம் என்னவெனில், கன்னிமைகுன்றாத தாய்மையை வெளிப்படுத்தவேண்டிய கால எல்லைவரும்வரையும் அவ்விவாகபந்தனம் தேவமாதாவின்மரியாதையைக் காப்பாற்ற ஏதுவானது. இந்தஇரகசியத்தைக் கன்னித்தாயார் எப்போது வெளிப்படுத்தினாரோ? யேசுநாதாது உத்தானத்தின்பின்தான் இதை வெளிப்படுத்தி யிருக்கவேண்டும். உத்தானவைபவ அற்புதத்தினால் தமது தேவத்தன்மையைக் கிறீஸ்துநாதர் ஒப்பித்தபின்னர் அதைவெளிப்படுத்துதல் பொருத்தமன்றோ! அதற்குமுன் அதைஅறிந்தவர்கள் மிகச்சிலர். தேவமாதா, அர்ச். சூசையப்பர், மரியாயின்பந்துவான எலிசபெத்தும், யேசுநாதரும்மாத்திரம் அறிந்திருந்தார்கள்.

உலகத்தின்முகத்தில் ஆண்டவர் சூசையின்மகனாக எண்ணப்பட்டார். அதனால் மாதாவின்சங்கை காப்பாற்றப்பட்டது. கணவனுக்கு வதுவையாகாமல், மரியாய் சூல்கொண்டாரென்று அறியவந்தால் கிறீஸ்துநாதரின்பிறப்பு பரிகாசத்திற்கு இலக்காகி, மனத்திடன் அற்றோருக்கு இடறலாகியும் விடும்.

இவ்விவாகபந்தனம் அவசியமானதற்கு இன்னுமொருநியாயம் என்னவெனில், சூசைமாமுனிவர் மரியாயின் தூய்மைக்குச் சான்றுபகரக் கூடியவரானார். எந்தப்பட்டமாவது பாடின்றி ஆவதில்லை. சூசையப்பரும மரியம்மாளும் தங்களுக்குத் தேவன் அருளிய மகிமைக்குத்தக்கதாகத் துன்பத்தை அனுபவித்தனர். "கல்வாரி வியாகுலத்தைத் தவிர்த்து, நான் அனுபவித்த வியாகுலங்களில் சூசையப்பர் என்னையிட்டுத் துக்கம்அனுபவிக்கக் காரணமாகினேனே என்றுஎண்ணிப் பட்ட வியாகுலந்தான் அதிகொடியது" எனத்தேவதாயார் ஓர்அர்ச்சியசிஷ்டருக்கு அறிவித்தார். சூசையப்பர் தமதுசீவியத்தின் ஆரம்பத்திலேயே துன்புற்றார். இருவரும் துறவறவாக்கைக் கடந்தாரில்லை. ஆதலின் கன்னிமரியம்மாள் கர்ப்பவதியானமை அவருக்கு விளங்கவில்லை. "இது எப்படியாகும்?" என்று சந்தேகங்கொண்

(அடுத்த பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சூசைமாமுனிவர்

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

டார். அச்சந்தேகத்தைத் தீர்க்கச் சம்மனசுவந்து: "அதற்குத்தேவன் வழிகண்டார்" என்று தேற்றியது. மனித சாஸ்திரங்கள் அதை விளக்கமாட்டா. மரியம்மாளைத் தன்பிறந்தகத்துக்கு இரகசியமாய் அனுப்பிவிடச் சூசையப்பர் உத்தேசித்தபொழுது, அச்சந்தேகத் திரை நீங்கியது. தேவதூதன் அவருக்குத்தரிசனையாகி: "சூசை! தாவீது குமா, மரியாளைப் பெண்ணாகஏற்றுக் கொள்ள அஞ்சேல்; பவித்திராத்மாவின்வலியால் அவள் சூல்கொண்டாள்; அவள்பெறும்மகவிற்கு யேசுஎன்னும் நாமஞ்சூட்டுதி; ஏனெனில், தம்சனரைப் பாவத்தில்நின்று காப்பார்" என்று சுவிசேஷம்கூறும்.

சூசைதாதையின் சஞ்சலந்தீர்ந்து அவர்மனம் சாந்திபெற்றது. கிறீஸ்துநாதர் கன்னிகையின்வழியாய்ப் பிறப்பாரென்றும், மனிதரை மீட்பதே அவர்சீவியத்தின் இலட்சியமென்றும் சம்மனசுஅறிவித்தபின் முதியோன் அமைதிபெற்றார். "மரியாளைப்பெண்ணாக ஏற்றுக்கொள்ள அஞ்சேல்" என்பதிலிருந்து, தேவவல்லமையினால்தான் மரியாள் கர்ப்பவதி ஆயினள்என்பதை ஊகித்தறிந்தும், அவள் கன்னிமை நீங்காதவள், பரிசுத்தவதி, அவளை எனதுவீட்டிற்கு அழைத்துச்செல்ல நான் அபாத்திரன் என்பதையுணர்ந்துமே தவமுனிவர் அவளைஏற்க 'அஞ்சி'யிருப்பார்.

எதிர்பார்த்திருந்த மெசியாவைப் பற்றியஅறிவு ஏற்கனவே மனதில் இல்லாதஒருவர் கன்னிமைகுன்றாப் பேற்றைப்பற்றிக் கேட்டமாத்திரத்தில் அதைஏற்றிருப்பாரா? தாவீதின் வமிசத்தோன்றலாய் மெசியா என்னும் கிறீஸ்து வருவாரென்றும், தாமும் தாவீதுமரபினர்என்றும் சூசைமாமுனிவர் அறிவார். வரவிருப்பவரைச் சுட்டிய தீர்க்கதரிசன வாக்குகளையும், குறிப்பாகக் கிறீஸ்துநாதர் ஓர்கன்னிகையிடமிருந்து பிறப்பாரென்ற இசையாசின் தீர்க்கதரிசனத்தையும் அவர் அறிந்திருந்தார். வேதம்சொல்லுகிறபடி, சூசைமாதவன் நீதிமானாய்இருந்திராவிடினும் சம்மனசின் அறிவித்தலும், மரியாய்க்குக்கிடைத்த மகிமையும் அவரைப் பரிசுத்தராக்கப் போதுமானவை. சகலசஞ்சலமும் சூசைமுனிவரின் மனத்தைவிட்டு அகன்றது. மரியாயிடம் நிறைவேறிய பரமஇரகசியத்தின்மட்டில் அன்பும், ஆழ்ந்தபக்தியும் அவரிடங்குடிகொண்டன.

— எம். ஜேயம்.

## மரண அறிக்கை

மிருசுவில்வாசரும், கோலாலம்பூரில் பதினைந்துவருடம் உத்தியோகம் வகித்திருந்து தற்போது பளையிலே ஓர் தென்னந்தோட்டச் சுப்பிறின்ரெண்டனாய் இருந்துவருகிறவருமான திரு. எஸ். சிங்கராயர் தப்புத்துரைஅவர்களின் பாரியாரான திருமதி மேரிஎஞ்சல்என்பவ சிலகாலமாக நோய்வாய்ப்பட்டிருந்து சிறந்தஆங்கில, சுதேச வைத்தியர்களாலே சிகிச்சை செய்யப்பெற்றும் குணமுறாது, அந்தியதேவதிரவியானுமானங்களை நல்லறிவுடன் பெற்றுச் சென்ற 8-3-54 திங்கட்கிழமை காலஞ்செல்லலாயினை. மரிக்கும்போது இவவுக்குவயது 45. கொழும்பு, பொறளைக் குருமடத்திலே குருத்துவமாணவராய் இருந்துவருகின்ற வண. எஸ். ஈ. நீக்கலஸ் பிறதர் இவவின் புதல்வராவர். வாழைச்சேனை அரசினர் பெண்பாடசாலைத் தலைமை ஆசிரியை திருமதி வி. வி. யோசெவ், சம்பாந்துறை அரசினர் பெண்பாடசாலைத் தலைமைஆசிரியை திருமதி ஈ. எஸ். பெஞ்சமின்என்பவர்கள் இவவின் சகோதரிகள். மட்டக்களப்புமுதலாம் இடங்களிலே ஸ்ரொக் இன்ஸ்பெக்றராயிருந்து தற்போது சம்பத்திரிசியார்கல்லூரியில் ஓர்லிகிதராகக் கடமைபார்க்கத் தொடங்கியிருக்கும் திரு. எஸ். என். சாமுவேல்அவர்கள் இவவின் சகோதரி முறையானவர். மறுநாட்சாயந்தரம் பெருந்திரளான இனசனர், சிநேகிதர் கூடியசமுகத்திலே குருமார் பதின்மர், மகனான குருத்துவமாணவர் சமேதராய் மிருசுவில் கட்டளைக்குரவர் வண. ஜே. ஸ்பம்பதி சுவாமியவர்கள் வீட்டிலிருந்து துக்கசங்கீதம்பாடிச்செல்லப் பிரேதமானது கோவில்கொண்டுசென்று ஆங்கே வண. பி. ஈ. அல்பிறெட் சுவாமியவர்களால் அந்திமதிருச்சடங்குகள் நிறைவேறியதும் சேமக்காலையில் சுவாமியவர்களின் கடைசிஆசீர்வாதத்துடன் அடக்கவைபவம் சிறப்பாக நடந்தேறியது. இவவை இழந்து துன்புறும் நாயகரோடும், தாயாரோடும், மகனான குருத்துவமாணவர், மற்றும்இருபிள்ளைகளோடும், இனசனரோடும் நாமும் அனுதாபபடுகின்றோம்.

R. I. P.

## 9-ம் வருட மரணஞாபகம்

இறப்பு: 26-3-45

எங்கள் நேசத்தந்தையும், சம்மாட்டியாருமான இராயப்பு வியாகுலம் அவர்கள் இப்பூவுலகைவிட்டுப் பரலோகபிராப்தியான ஒன்பதாம் வருடம் பங்குனிமாதம் 26-ந்திகதி பூர்த்தியாகின்றபடியால் இதைக் காணும் வண. குருப்பிரசாதிகளே! சங். கன்னியர்களே! சகோதர சகோதரிகளே! இவ்வாத்துமத்தின் நித்திய இளைப்பாற்றிக்காக வேண்டிக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகிறோம்.

அரியதந்தையை இழந்து பரதவிக்கும் மக்கள்:


வி. பிரான்சீஸ்,
(குமரன் தியேட்டர்.)
வி. டேவிட்.

பனங்கட்டிக்கொட்டு,
மன்னார்.

## மரண சங்கதி

முல்லைத்தீவுப்பட்டினத்தில் யாவராலும் நன்கறியப்பட்டவரும், சம்பேதுருவானவர் ஆலயமூப்பரும், அனுபவ ஞானம், நேர்மை, அனுதாபம், இன்சொல், அமைதியானபோக்கு உடையவருமான திரு. ஏ. ஞானமுத்துஅவர்கள் கடந்த 10 மாதகாலமாகச் சுகத்தாழ்வுற்றிருந்து சென்ற 14-3-54 ஞாயிறுவாரம் காலஞ்செல்லலாயினர். மரிக்கும்போது இவருக்குவயது 85. இவர் தமதுசீவியகாலத்தின் பெரும்பகுதியைக் கோவிற்பணிகளிலேயே செலவிட்டுப் பல்லோரினதும் நன்மதிப்பைப்பெற்றிருந்தார். இவருக்குமூன்று புதல்வர்கள்உளர். இவர்களிலே சம்பத்திரிசியார்கல்லூரி ஆசிரியர்களில் ஒருவரான திரு. ஜி. அருளானந்தம்அவர்கள் ஒருவராவர். மறுநாள் அஸ்தமனநேரம் இவரின்பிரேதமானது யாழ்ப்பாணத்திலும், மற்றுமிடங்களிலுமிருந்து திரளானஇனசனர், சிநேகிதர் வந்து கூடியசமுகத்திலே வண. எஸ். ஏ. ஞானப்பிரகாசம்சுவாமியவர்கள் துக்கசங்கீதம்பாடிக் கடைசி ஆசீர்வாதம் கூறிநிற்கச் சேமக்காலையில் பூமதானம் பண்ணப்பட்டது. இவரைஇழந்து துன்புறும் பாரியார், புத்திரர், மருமக்கள், பேரப்பிள்ளைகள் முதலானோருடன் நாமும் அனுதாபப்படுகின்றோம்.

R. I. P.



# இன்ஷூரன்ஸ் ஆசாமிகள் இல்லாது போயிருந்தால்

வெகு சொற்பமானவர்களே. ஆயுள் அஷ்யூரன்ஸ் பொலிஸிதாரராக இருக்கக்கூடும். ஆயிரக்கணக்கான விதவைகளும், அநாதைக் குழந்தைகளும் நிர்க்கதியாகப் பரிதவிக்கக்கூடிய நிலைமையிலிருப்பர். உங்கள் குடும்பத்திற்கு உடனடியாகப் பாதுகாப்புத் தேடிக் கொள்வதற்கு ஆயுள் அஷ்யூரன்ஸே நிச்சயமான வழியாகவிருப்பினும், ஆயுள் பொலிஸிகளைப் பெற்றுக்கொள்வதற்கு இன்ஸ்யூரன்ஸ் கந்தோர்கள் முன்புக்கு நீண்ட வரிசைகளில் ஜனங்கள் நின்றுகொண்டிருக்கவில்லை. காரணம் ஆயுள் அஷ்யூரன்ஸ் வாங்கப்படுவதல்ல, ஆனால் விற்கப்படுவதே.

இது எளிதில் ஊகிக்கக்கூடியது. ஏனெனில், ஒவ்வொரு மனிதனும் பூரண ஆயுள் காலம் ஜீவிக்க முடியுமென்றே எதிர்பார்க்கிறான். எதிர்காலத்தில் அளவில்லாத நம்பிக்கையுள்ளவனாகப் பிற்காலத்திற்கெனப் பாதுகாப்புத் தேடுவதை ஒத்தி போடுகிறான். ஏதாவது அபாயம் நேருவதானால், தனக்கல்ல, அயலான் ஒருவனுக்கே அவ்வாறு நேருமென நினைக்கிறான். எனினும், நாம் நினைப்பதுபோல் நன்மையே எப்பொழுதும் நேருவதில்லை. எனவே ஒரு மனிதன், மனைவி, குழந்தைகளின் நலனைப் பொறுத்த மட்டில் இன்ஸ்யூரன்ஸ் ஏஜெண்டுகள் இருப்பது பெரிய அதிர்ஷ்டம். இந்த ஏஜெண்டுகள் ஒருவரின் விருப்பையோ, வெறுப்பையோ பொருட்படுத்தாது உதவி புரியும் உண்மைநண்பர்களாக விளங்குகின்றனர்.

## சிலோன் இன்ஷூரன்ஸ்

கம்பெனி லிமிட்டெட்,

தலைமை ஆபீஸ்:

69, இராணி வீதி — கொழும்பு.

Ceylon Iusurance Co. Ltd., 69. Queen St., Colombo

## அரசாங்க அறிவித்தல்

### வனபரிபாலன இலாகா

N. 677—27-3-54 காலை 9மணி தொடக்கம் யாழ்ப்பாணம் அரசினர் மரக்காலையில் 29 கூறுகள் அடங்கிய 29 பாலைமரங்கள் - 655 அடிகள், 38 கூறுகள் அடங்கிய 38 முதிரை மரங்கள் - 428 அடிகள், 5 கூறுகள் அடங்கிய 5 முனை மரங்கள் - 108.3 அடிகள், 13 கூறுகள் அடங்கிய அரிந்த மரங்கள் - 735.8 அடிகள், ஒவ்வொரு கூறும் ஏறக்குறைய 50 அடிகள், 4 கூறுகள் அடங்கிய சிலிப்பர் நுனித்துண்டுகள் - 212.8 அடிகள் ஒவ்வொரு கூறும் ஏறக்குறைய 50 அடிகள் முதலியன பகிரங்க ஏலத்தில் விற்கப்படும். விற்பனவிற்குமுன் அவற்றைப் பார்க்க விரும்புவோர் யாழ்ப்பாணம் டிப்போகீப்பரின் அனுமதியோடு பார்வையிடலாம்.

## காணிவிற்பனவு கேள்விப்பத்திரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் 1467-ம் இலக்க உரிமைத்தத்துவ வழக்கில் காரம்பனிலிருந்து காலஞ்சென்ற வ. அ. இராசையாவின் ஆஸ்தியைப் பற்றியகடன்களை இறுப்பதற்காகக் கிடைத்த உத்தரவுப்படி கீழே விபரிக்கப்பட்டிருப்பதும், குறித்த இராசையாவுக்குரியதுமான ஆதனத்தை வாங்குவதற்குக் கேள்விப்பத்திரங்கள் யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டுச் சக்கிடுத்தாருக்கு இந்த விளம்பரத் திகதியிலிருந்து 21 நாட்களுக்கிடையில் அனுப்பப்படல் வேண்டும்.

குறித்தகாணி அதிகம் உயர்ந்த கேள்விக்காரருக்குக் கொடுக்கப்படும்.

குறித்தகாணி ரூபா 17,000/-(பதினேழாயிரம்) பெறும்என்பதாக மதிக்கப்பட்டிருக்கிறது.

### ஆதனவிபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப்பகுதி ஊர்காவற்றுறைக் கோவிற்பற்று ஊர்காவற்றுறை மேற்கிறை. கோவில்தோட்டம் குளி $14\frac{3}{8}$ (பதினாலே காலேயரைக்கால்) கிட்டங்கிக் கட்டிடமும். எல்லை: கிழக்கு பிலிப்புப்பிள்ளை யோசேப்புவுக்கும், சகோதரருக்கும்உரிய ஆதனம், வடக்கு முடிக்குரிய நிலம், மேற்கு S. R. நிட்சுவே பெண் அந்தோனியாப்பிள்ளைக்குரிய ஆதனம், தெற்கு முடிக்குரிய மாக்கெற் (சந்தை) நிலம். இதடங்கலும்.

A. Kanagasabai,
Proctor for Administratrix
in Testy. Case
No. 1467 D. C. Jaffna.

Karainagar,
1-3-54.

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 49, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, March 18-1954

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org